தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு
2024–2025

# செய்தி மற்றும் விளம்பரம்

மானியக் கோரிக்கை எண். 28


**மு.பெ. சாமிநாதன்**

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்

# மானியக் கோரிக்கை எண்: 28
# செய்தி மற்றும் விளம்பரம்
## பொருளடக்கம்



| வ. எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 3 |
| 1 | நினைவகங்கள் | 8 |
| 2 | அரசு விழாக்கள் | 36 |
| 3 | செய்தி வெளியீட்டுப் பிரிவு | 54 |
| 4 | சமூக ஊடகப் பிரிவு | 57 |
| 5 | தமிழ்நாடு திரைப்படப் பிரிவு | 60 |
| 6 | புகைப்படப் பிரிவு | 65 |
| 7 | மேற்கோள் பிரிவு | 67 |
| 8 | கள விளம்பரம் | 70 |
| 9 | விளம்பரம் | 74 |
| 10 | ஊடக மையம் | 77 |
| 11 | பொருட்காட்சிப் பிரிவு | 78 |
| 12 | மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் | 88 |
| 13 | மாநிலச் செய்தி நிலையம், சென்னை | 90 |
| 14 | தமிழரசு | 93 |
| 15 | பத்திரிகையாளர் நலவாரியம் | 104 |
| 16 | பத்திரிகையாளர் நலன் | 110 |
| 17 | திரைப்படத் துறையினர் நலவாரியம் | 120 |
| 18 | திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள் | 126 |
| 19 | தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் (ம) தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் | 137 |
| 20 | திரையரங்குகள், வீடியோ மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு | 146 |
| | நிறைவுரை | 158 |

## முன்னுரை

**"வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்**
**கோல்நோக்கி வாழும் குடி"**

**(குறள்–542)**

– என்பது அய்யன் திருவள்ளுவரின் அருங்குறள்.

"உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு, மழை தேவைப்படுவதுபோல, ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது".

– கலைஞர் உரை.

இக்குறள் கருத்தை, **"மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி"** – என்கிறது குமரகுருபரரின் நீதிநெறி விளக்கம்.

மன்னனின் எண்ணங்களை அதாவது, அரசின் எண்ணங்களை - திட்டங்களைத் தெரிந்துகொள்வதன் மூலம்தான் மக்கள் அரசின் வழி செல்ல முடியும். இந்தச் சிந்தனையைச் செயல்படுத்தி மக்களை அரசோடு இணைந்து செல்லத் துணைபுரிவது தமிழ்நாடு அரசின் செய்தி மற்றும் விளம்பரத்துறை.

இரண்டாம் உலகப்போர் 1939ஆம் ஆண்டில் தொடங்கி, 1945ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. அப்போது, இந்திய நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்த ஆங்கிலேய அரசு இரண்டாம் உலகப் போரில் பங்கு பெற்ற பிரிட்டிஷ் அரசு மீது உள்ள நியாயத்தையும், ஜெர்மன் அதிபர் இட்லரின் ஏதேச்சாதிகாரம் தவிர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இந்திய மக்களிடையே உணர்த்தி, அவர்களின் ஆதரவினைத் திரட்டுவதற்காக 1942ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16ஆம் நாள் போர் விளம்பர அதிகாரி ஒருவரை நியமித்தது ஆங்கிலேயே அரசு.

1945இல் உலகப் போர் முடிவடைந்தது. நம் நாடு 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 அன்று விடுதலை பெற்றபின் நாட்டு முன்னேற்றத்திற்காக அரசு செயல்படுத்தும் திட்டங்களை மக்களுக்கு எடுத்துரைக்கும் நோக்குடன் விளம்பரத்துறை தொடர்ந்து செயல்படத் தொடங்கியது.

1967ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அரசு அமைந்ததற்குப் பின்னர், அவரது திடீர் மறைவைத் தொடர்ந்து, 10.2.1969 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றார்கள். அதன் பின்னர் செய்தி மற்றும் விளம்பரத்துறை புது மிடுக்குடன் செயல்படத் தொடங்கியது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலுடன் தமிழ்நாட்டு மக்களின் எண்ணங்களை அரசுக்கு உரைத்திடவும், மக்களின் நலனுக்காக அரசின் பல்வேறு துறைகள் ஆற்றிடும் திட்டங்களை மக்களிடையே எடுத்துரைத்து, அவர்களின் நல்லாதரவை அரசு பெற்றுப் பெருக்கிடும் வல்லமை மிக்கதோர் கருவியாகச் செய்திடவும் செய்தி மற்றும் விளம்பரத்துறை சிறப்பான பணிகளை நிறைவேற்றிட முனைந்தது.

மாவட்டங்களில் மக்கள் தொடர்பு அலுவலகங்களும், செய்தி நிறுவனங்களும் ஏற்படுத்தப்பட்டு அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் மகத்தான பணிகளை மிகச் சிறப்பாக நிறைவேற்றி அரசுக்குப் புகழ் சேர்க்கத் தொடங்கின. 1970–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1–ஆம் நாள் மேனாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, செய்தி மற்றும் விளம்பரத்துறை சார்பில், அரசின் முக்கிய நிகழ்வுகள், திட்டங்கள் குறித்த செய்திகளை, **"தமிழரசு"** எனும் இதழ் மாதம் இருமுறை தமிழிலும், மாதம் ஒருமுறை ஆங்கிலத்திலும் வெளியிடப்படுகிறது.

அரசின் திட்டங்களை மக்களிடம் ஆதாரப்பூர்வமாகக் கொண்டு சேர்ப்பதில், **"தமிழரசு இதழ்"** துறையின் முக்கியக் கருவியாகத் திகழ்ந்து வருகிறது.

திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 2021 – மே திங்கள் 7ஆம் நாள் தமிழ்நாடு அரசின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் ஓய்வுக்கே ஓய்வு தந்து – ஒவ்வொரு நொடியும் தமிழ்நாட்டின் முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு உழைத்து வருகிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் பெருமளவில் பயனடையும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம், பள்ளிக் குழந்தைகள் காலை உணவுத் திட்டம் மற்றும் விவசாயப் பெருங்குடிகளின் நலனை போற்றுகின்ற வகையில் தமிழ்நாட்டின் முதல் முறையாக வேளாண்துறைக்கென்று புதிய நிலை அறிக்கை தாக்கல் செய்தது உள்ளிட்ட பல்வேறு சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றி வெற்றி கண்டுள்ளார்கள்.

**" 'எங்களுக்கு யாருமில்லை' என்று யாரெல்லாம் நினைக்கிறார்களோ, 'எங்களைக் காப்பாற்ற யார் இருக்கிறார்கள்' என்று யார் கேட்கிறார்களோ, அவர்கள் எல்லோருக்குமான அரசுதான் இது"**

– என்று கூறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தும் திட்டங்கள், அறிவிப்புகள், ஆணைகள், செய்தி வெளியீடுகள், அறிக்கைகள், கடிதங்கள், வேண்டுகோள்கள் முதலிய அனைத்தையும் மக்களுக்கு உடனுக்குடன் கொண்டுசென்று சேர்த்திடும் அரும்பணியைத் தமிழ்நாடு அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

இதன் பொருட்டு, நாளிதழ்கள், வானொலி, தொலைக்காட்சி ஊடகங்கள், சமூக ஊடகங்கள், இணைய வலைதளங்கள் முதலான அனைத்துடனும் இணக்கமான நல்லுறவுகளைப் பேணி தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகளின் திட்டங்களையும் அறிவிப்புகளையும் உடனுக்குடன் வெளியிட்டு அரசின் திட்டங்களுக்கு வெற்றி தேடித் தரும் பெரும் பணியைச் செம்மையாகச் செய்து வருகிறது தமிழ்நாடு அரசின் செய்தி மற்றும் விளம்பரத்துறை. இந்தத் துறையின் அங்கங்களாக அமைந்துள்ள பல்வேறு பிரிவுகளின் பணிகள் பின்வருமாறு:

# நினைவகங்கள்

## தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள நினைவகங்கள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள்

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லா வகையில் விடுதலைப் போர்த் தியாகிகளுக்கும். மொழிப் போர்த் தியாகிகளுக்கும், தியாகத் திருமக்களுக்கும் எழிலொழுகும் வடிவங்களில் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டுச் செய்தி மக்கள் தொடர்புத்துறையினால் பராமரிக்கப்படுகின்றன. அதாவது, நம் நாட்டு விடுதலைக்கு வித்திட்ட வீரத் தியாகிகள், தமிழ்நாட்டின் மிகச்சிறந்த ஆளுமைகள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுப் பெருமையினைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதிக் கருத்துகளை விரைந்து வளர்த்த தலைவர்கள், கவிஞர்கள், இசை மேதைகள், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாட்டின் தியாகத் தலைவர்கள் முதலானோரின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்திடும் வண்ணம், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், 88 (எண்பத்து எட்டு) நினைவகங்கள், 4 (நான்கு) அரங்கங்கள், 5 (ஐந்து) நினைவுத் தூண்கள், 2 (இரண்டு) நினைவுச் சின்னங்கள், ஒரு நினைவு வளைவு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் சிறப்புகளையும், பெருமைகளையும் பொதுமக்கள் அறிந்து பயனடையும்

வகையில், சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

**சென்னை மண்டலம்**

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| **சென்னை மாவட்டம்** | | |
| 1 | பேரறிஞர் அண்ணா நினைவிடம் – அருங்காட்சியகம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 2 | புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 3 | புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா நினைவிடம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 4 | முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் | அண்ணா நினைவிட வளாகம், காமராஜர் சாலை, சென்னை |
| 5 | காந்தி மண்டபம் | கிண்டி, சென்னை |
| 6 | பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் | கிண்டி, சென்னை |
| 7 | மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம் | கிண்டி, சென்னை |
| 8 | பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம் | கிண்டி, சென்னை |
| 9 | வ.உ.சி. செக்கு மண்டபம் | கிண்டி, சென்னை |
| 10 | மகாகவி பாரதியார் நினைவு இல்லம் | துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை |
| 11 | பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம் | திருமலை சாலை, தியாகராயர் நகர், சென்னை |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 12 | வள்ளுவர் கோட்டம் | நுங்கம்பாக்கம், சென்னை |
| 13 | மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம் | கிண்டி, சென்னை |
| 14 | தியாகிகள் மணிமண்டபம் | கிண்டி, சென்னை |
| 15 | திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் நினைவகம் | கிண்டி, சென்னை |
| 16 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபம் | டாம்ஸ் சாலை, புதுப்பேட்டை, சென்னை |
| 17 | சிந்தனைச் சிற்பி ம.சிங்கார வேலர்– சுயமரியாதைச் சுடரொளி என்.ஜீவரத்தினம் மணி மண்டபங்கள் (ம) நூலகம் | இராயபுரம், சென்னை |
| 18 | நடிகர் திலகம் சிவாஜிகணேசன் மணிமண்டபம் | அடையாறு, சென்னை |
| 19 | அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம் | இராஜா அண்ணாமலைபுரம், சென்னை |
| 20 | திராவிடப் பேரொளி பண்டிதர் அயோத்திதாசர் மணிமண்டபம் | கிண்டி, சென்னை |
| **செங்கல்பட்டு மாவட்டம்** | | |
| 21 | திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் மணிமண்டபம் | அச்சரப்பாக்கம் கிராமம், மதுராந்தகம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம் |
| **காஞ்சிபுரம் மாவட்டம்** | | |
| 22 | பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் | சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| | **வேலூர் மாவட்டம்** | |
| 23 | முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரமராஜ சிங்கன் நினைவகம்) | வேலூர், வேலூர் மாவட்டம் |

**திருச்சி மண்டலம்**

| | | |
|---|---|---|
| | **திருச்சி மாவட்டம்** | |
| 24 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் நினைவு இல்லம் | வரகனேரி, திருச்சி மாநகர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 25 | பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் மணிமண்டபம் | கோ – அபிஷேகபுரம் கிராமம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 26 | சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் மணிமண்டபம் | |
| 27 | எம்.கே.தியாகராஜ பாகவதர் மணிமண்டபம் | |
| | **விழுப்புரம் மாவட்டம்** | |
| 28 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம் | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |
| | **கடலூர் மாவட்டம்** | |
| 29 | சுவாமி சகஜானந்தா மணிமண்டபம் | சிதம்பரம், கடலூர் மாவட்டம் |
| 30 | இராமசாமி படையாட்சியார் நினைவு மண்டபம் | மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம் |

**கோயம்புத்தூர் மண்டலம்**

| | | |
|---|---|---|
| | **கோயம்புத்தூர் மாவட்டம்** | |
| 31 | உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம் | வையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் |

| | | |
|---|---|---|
| | **சேலம் மாவட்டம்** | |
| 32 | விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை நினைவுச் சின்னம் | சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 33 | புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் மற்றும் புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா நினைவு மண்டபம் | சேலம், சேலம் மாவட்டம் |
| | **நாமக்கல் மாவட்டம்** | |
| 34 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம் | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 35 | அல்லாள இளைய நாயகர் குவிமாடம் | ஜேடர்பாளையம், நாமக்கல் மாவட்டம். |
| | **ஈரோடு மாவட்டம்** | |
| 36 | பெரியார்–அண்ணா நினைவகம் | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 37 | தீரன் சின்னமலை மணிமண்டபம் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| | **தருமபுரி மாவட்டம்** | |
| 38 | வள்ளல் அதியமான் கோட்டம் | தருமபுரி, தருமபுரி மாவட்டம் |
| 39 | தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 40 | பாரதமாதா நினைவாலயம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| | **திருப்பூர் மாவட்டம்** | |
| 41 | திருப்பூர் குமரன் நினைவகம் | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 42 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம் | உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் |

| கிருஷ்ணகிரி மாவட்டம் | | |
|---|---|---|
| 43 | மூதறிஞர் இராஜாஜி (பிறந்த இல்லம்) நினைவு இல்லம் | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |

**திருநெல்வேலி மண்டலம்**

| திருநெல்வேலி மாவட்டம் | | |
|---|---|---|
| 44 | கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. மணிமண்டபம் | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 45 | தமிழறிஞர் கால்டுவெல் நினைவு இல்லம் | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 46 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் மணிமண்டபம் | பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| **கன்னியாகுமரி மாவட்டம்** | | |
| 47 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 48 | காந்தி நினைவு மண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 49 | பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 50 | சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம் | இடலாக்குடி, கோட்டாறு நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 51 | மார்ஷல் நேசமணி மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| **விருதுநகர் மாவட்டம்** | | |
| 52 | பெருந்தலைவர் காமராஜர் (பிறந்த இல்லம்) நினைவு இல்லம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 53 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |

| | | |
|---|---|---|
| 54 | தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| **தூத்துக்குடி மாவட்டம்** | | |
| 55 | மகாகவி பாரதியார் மணிமண்டபம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 56 | மகாகவி பாரதியார் இல்லம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 57 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் நினைவு இல்லம் | ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 58 | வீரன் அழகு முத்துக்கோன் மணிமண்டபம் | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 59 | சுதந்திரப் போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம் | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 60 | சுதந்திரப் போராட்டவீரன் வெள்ளையத்தேவன் நினைவகம் | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம் |
| 61 | அமுதகவி உமறுப்புலவர் நினைவகம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 62 | வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம் | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |
| 63 | கி.ராஜநாராயணன் அரங்கம் | கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம். |
| 64 | டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம் | திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |
| 65 | ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் மணிமண்டபம் | ரோச் பூங்கா, மீளவிட்டான்–2 கிராமம், தூத்துக்குடி மாவட்டம் |
| 66 | வீரமாமுனிவர் மணிமண்டபம் | காமநாயக்கன் பட்டி கிராமம், புனித பரலோகமாதா ஆலய வளாகம், தூத்துக்குடி |

| தென்காசி மாவட்டம் | | |
|---|---|---|
| 67 | தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம் | செங்கோட்டை, தென்காசி மாவட்டம் |
| 68 | பூலித்தேவன் நினைவு மாளிகை | நெற்கட்டும்செவல், தென்காசி மாவட்டம் |

**மதுரை மண்டலம்**

| மதுரை மாவட்டம் | | |
|---|---|---|
| 69 | தியாக சீலர் கக்கன் மணிமண்டபம் | தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 70 | தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம் | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 71 | பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம் | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 72 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம் | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 73 | பெருங்காமநல்லூர் தியாகிகள் நினைவு மண்டபம் | உசிலம்பட்டி, மதுரை மாவட்டம். |
| **திண்டுக்கல் மாவட்டம்** | | |
| 74 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம் | விருப்பாட்சி, திண்டுக்கல் மாவட்டம் |
| 75 | மாமன்னர்கள் ஐதர்அலி, திப்பு சுல்தான் மணிமண்டபம் | அடியனூத்து கிராமம், திண்டுக்கல் மாவட்டம் |
| **சிவகங்கை மாவட்டம்** | | |
| 76 | கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 77 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |

| | | |
|---|---|---|
| 78 | மருதுபாண்டியர் நினைவு மண்டபம் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 79 | வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |

**தஞ்சாவூர் மண்டலம்**

| | | |
|---|---|---|
| **தஞ்சாவூர் மாவட்டம்** | | |
| 80 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம் | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 81 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவு மண்டபம் | ஆவுடையான்குளம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| **திருவாரூர் மாவட்டம்** | | |
| 82 | தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம் | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 83 | தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம் | திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் |
| 84 | மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம் | திருவாரூர், திருவாரூர் மாவட்டம் |
| **மயிலாடுதுறை மாவட்டம்** | | |
| 85 | தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் | தில்லையாடி, மயிலாடுதுறை மாவட்டம் |
| 86 | தமிழிசை மூவர் மணிமண்டபம் | சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம் |

| | | |
|---|---|---|
| **கேரள மாநிலம்** | | |
| 87 | தந்தை பெரியார் நினைவகம் | வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம் |
| **உத்தரபிரதேசம் மாநிலம்** | | |
| 88 | பாரதியார் நினைவு இல்லம் | வாரணாசி, உத்தரபிரதேசம் மாநிலம். |

**அரங்கங்கள்**

| வ. எண் | அரங்கம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | மூதறிஞர் இராஜாஜி மண்டபம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 2 | கலைவாணர் அரங்கம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 3 | அண்ணா கலையரங்கம் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 4 | மகாமகம் பல்நோக்கு கலை அரங்கம் | கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் |

**நினைவுத் தூண்கள்**

| வ. எண் | நினைவுத் தூண் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன்விழா நினைவுத் தூண் | காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 2 | குடியரசு பொன்விழா நினைவுத் தூண் | காந்தி சிலை அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 3 | சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 4 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா நினைவுத் தூண் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 5 | இசை மேதை நல்லப்பசுவாமி நினைவுத் தூண் | விளாத்திகுளம், தூத்துக்குடி மாவட்டம். |

**நினைவுச் சின்னம்**

| வ. எண் | நினைவுச் சின்னம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | வீரத்தாய் குயிலி நினைவுச் சின்னம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 2 | சுதந்திரப் பொன்விழா நினைவுச் சின்னம் | போர் நினைவுச் சின்னம் அருகில், காமராஜர் சாலை, சென்னை |

**நினைவு வளைவு**

| வ. எண் | நினைவு வளைவு | அமைவிடம் |
|---|---|---|
| 1 | எம்.ஜி.ஆர் நூற்றாண்டு நினைவு வளைவு | மெரினா கடற்கரை, இராஜாஜி சாலை, சென்னை |

## நிறைவுபெற்ற பணிகள்

## முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்

சென்னை, காமராஜர் சாலை, அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில் அதன் ஒரு பகுதி நிலவறையில் நவீன விளக்கப் படங்கள் கொண்ட கலைஞர் உலகம் எனும் அருங்காட்சியகத்துடன் கூடிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்பட்டதோடு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவிடமும் நவீன முறையில் மேம்படுத்தப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26.2.2024 அன்று பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாருக்குக் ரூ.40,00,000/- (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் பூங்காவில் திருவுருவச் சிலையும், பெண் சமூகச் சீர்திருத்தவாதி

மூவலூர் இராமாமிர்தம் அம்மையாருக்கு ரூ.15,97,669/- (ரூபாய் பதினைந்து இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து அறுநூற்று அறுபத்தொன்பது மட்டும்) மதிப்பீட்டில் மயிலாடுதுறையில் திருவுருவச் சிலையும், சமூகச் சீர்திருத்த வேங்கை தமிழ்நாட்டின் முதல் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையாருக்குப் ரூ.9,84,650/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து என்பத்து நான்காயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) மதிப்பீட்டில் புதுக்கோட்டையில் திருவுருவச் சிலையும் நிறுவப்பட்டு, 10.5.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகத்தில் தமிழ்நாடு அரசின் மேனாள் அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களுக்கு ரூ.37,20,000/- (ரூபாய் முப்பத்தேழு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவப்பட்டு, 10.8.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ் மக்களின் நெஞ்சங்களில் தனித்துவமிக்க தம்குரலால் வாழ்ந்து கொண்டிருக்கும் பின்னணிப் பாடகர் திரு. டி.எம். சௌந்தரராஜன் அவர்களுக்கு ரூ.46,68,453/− (ரூபாய் நாற்பத்தாறு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து நானூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) மதிப்பீட்டில் மதுரையில் திருவுருவச் சிலை நிறுவப்பட்டு, 16.8.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்குச் சென்னை காந்தி மண்டப வளாகத்தில் ரூ.17,50,000/− (ரூபாய் பதினேழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவப்பட்டு, 5.9.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வங்கக் கவி இரவீந்திரநாத் தாகூருக்கு சென்னை இராணி மேரி கல்லூரி வளாகத்தில் ரூ.29,61,694/− (ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து அறுபத்தோராயிரத்து அறுநூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்) திருவுருவச் சிலை நிறுவப்பட்டு, 8.9.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களுக்கு சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் ரூ.21,95,799/– (ரூபாய் இருபத்தொரு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஒன்பது மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவப்பட்டு, 15.10.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்கு ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) கடலூர் மாநகராட்சி முதுநகர் காந்தி பூங்காவில் திருவுருவச் சிலை நிறுவப்பட்டு, 2.11.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தூத்துக்குடி மக்களுக்கு குடிநீர் திட்டம் கொண்டு வந்த ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு ரூ.77,87,343/– (ரூபாய் எழுபத்தேழு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து முந்நூற்று நாற்பத்து மூன்று மட்டும்) மதிப்பீட்டில் தூத்துக்குடி மாநகரில் குவி மாடத்துடன் கூடிய சிலை அமைக்கப்பட்டு, 15.11.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

காவிரி நடுவர் மன்றம் மற்றும் மண்டல் கமிஷன் அறிக்கையை நிறைவேற்றிய சமூக நீதிக் காவலர் முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்களுக்கு சென்னையில் ரூ.52,20,000/- (ரூபாய் ஐம்பத்து இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச்சிலை நிறுவப்பட்டு, 27.11.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

திராவிடப் போரொளி பண்டிதர் அயோத்திதாசர் அவர்களுடைய 175ஆவது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவரது சமூகப் பணிகளைப் போற்றும் விதமாக சென்னை காந்தி மண்டப வளாகத்தில் ரூ.2,48,75,859/- (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து எட்டு இலட்சத்து எழுபதைந்தாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தொன்பது மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட்டு, 1.12.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இத்தாலி நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்குச் சமயம் பரப்ப வந்த கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி தமிழ் கற்று, அதன் மேன்மையை உணர்ந்து தம் பெயரையே வீரமா முனிவர் என மாற்றிக் கொண்டு அகராதிக்

கலையை முதன் முதல் தமிழுக்குத் தந்து, தமிழ் வளர்த்தவருமான தமிழகராதியின் தந்தை எனப் புகழ் படைத்த வீரமாமுனிவருக்கு தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன்பட்டி கிராமம், புனித பரலோக மாதா ஆலய வளாகத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் ரூ.1,00,00,000/- (ரூபாய் ஒரு கோடி மட்டும்) மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, 22.1.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு நாமக்கல் நகரில் அன்னாரின் நினைவு இல்லத்தில் ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மார்பளவுச் சிலை நிறுவப்பட்டு, 22.1.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் மணிமண்டபம் ரூ.1,48,22,829/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து எட்டு இலட்சத்து இருபத்து இரண்டாயிரத்து எண்ணூற்று இருபத்தொன்பது மட்டும்) மதிப்பீட்டிலும், சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் மணிமண்டபம் ரூ.77,62,004/-(ரூபாய் எழுபத்தேழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து

நான்கு மட்டும்) மதிப்பீட்டிலும், திரு. எம்.கே. தியாகராஜ பாகவதர் மணிமண்டபம் ரூ.79,39,122/- (ரூபாய் எழுபத்தொன்பது இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து நூற்று இருபத்து இரண்டு மட்டும்) மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டு, கூடுதல் பணிகள் ரூ.98,00,000/- (ரூபாய் தொண்ணூற்று எட்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.2.2024 அன்று திறந்து வைக்கப்பட்டன.

செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கத்தில் திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு ரூ.2,17,74,909/- (ரூபாய் இரண்டு கோடியே பதினேழு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து ஒன்பது மட்டும்) மதிப்பீட்டில் மணிமண்டபமும், வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் சுதந்திரப் போராட்ட தியாகி அண்ணல் தங்கோ அவர்களுக்கு ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச் சிலையும், இராணிப்பேட்டையில் மாவட்டத்தில், தமிழறிஞர் டாக்டர். மு. வரதராசனார் அவர்களுக்கு ரூ.65,76,562/- (ரூபாய் அறுபத்தைந்து இலட்சத்து எழுபத்தாறாயிரத்து ஐநூற்று அறுபத்து இரண்டு மட்டும்) மதிப்பீட்டில்

திருவுருவச் சிலையும், தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் அவர்கள் நினைவாகக் கட்டப்பட்டுள்ள மணிமண்டபத்தில், ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள மார்பளவுச் சிலையை மாற்றி வீரன் சுந்தரலிங்கம் குதிரையில் அமர்ந்து போர் புரிவது போன்ற கம்பீரத் தோற்றத்துடன் கூடிய புதிய சிலையும் ரூ48,66,383/- (ரூபாய் நாற்பத்து எட்டு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து முந்நூற்று எண்பத்து மூன்று மட்டும்) மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.2.2024 அன்று திறந்து வைக்கப்பட்டன.

செப்டம்பர் 5, 2021 முதல் செப்டம்பர் 5, 2025 வரை தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் உருவாகும் அரசு கட்டடங்களுக்கு கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் பெயர் சூட்டப்பட்டது.

2022-2023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள அதியமான் கோட்டம் ரூ.98.15 கோடி செலவில் புனரமைக்கப்பட்டது.

**2021–22 மற்றும் 2023–2024ஆம் ஆண்டு 110 விதியின்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் – தொடர் நடவடிக்கை விவரங்கள் பின்வருமாறு:–**

- 1987ஆம் ஆண்டு இடஒதுக்கீடு போராட்டத்தில் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூகநீதிப் போராளிகளுக்கு ரூ.5,70,00,000/– (ரூபாய் ஐந்து கோடியே எழுபது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில், விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைத்திடும் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- பெரியவர் இளையபெருமாள் அவர்களின் தொண்டுகளைச் சிறப்பிக்கும் வகையில் கடலூர் மாவட்டத்தில் நூற்றாண்டு நினைவரங்கம் ரூ.5,70,00,000/– (ரூபாய் ஐந்து கோடியே எழுபது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- கேரளா மாநிலம், வைக்கத்தில் அமைந்துள்ள வைக்கம் வீரர் தந்தை பெரியார் நினைவிடத்தை நவீன முறையில் மறுசீரமைக்கவும், தந்தை பெரியார் தொடர்பான நினைவுப் பொருட்களைக் காட்சிப்படுத்திடவும் ரூ.8,14,00,000/– (ரூபாய் எட்டு கோடியே பதினான்கு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2022–2023 மற்றும் 2023–2024ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் – தொடர் நடவடிக்கை விவரங்கள் பின்வருமாறு:–**

- புதுக்கோட்டை மன்னர் ராஜகோபாலத் தொண்டைமான் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் அருங்காட்சியத்துடன் கூடிய நினைவுமண்டபம் ரூ.3,02,15,536/– (ரூபாய் மூன்று கோடியே இரண்டு இலட்சத்து பதினைந்தாயிரத்து ஐநூற்று முப்பத்து ஆறு மட்டும்) மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சிங்கப்பூரின் முதல் பிரதமர் லீ குவான் யூ அவர்களுக்கு திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் ரூ.50,00,000/– (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்படவுள்ளது.

- இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு ரூ.3,00,00,000/– (ரூபாய் மூன்று கோடி மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சுதந்திரப் போராட்ட காலத்தில் காந்தியடிகள், ஜீவாவுடன் சந்தித்துப் பேசிய சிவகங்கை மாவட்டம், சிராவயல் கிராமத்தில் அச்சந்திப்பு நினைவாக ரூ.3,00,00,000/- (ரூபாய் மூன்று கோடி மட்டும்) மதிப்பீட்டில் அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தில் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு கிரில் ஏற்பாடுகளுடன் அமைக்கப்பட்ட காத்திருப்புக் கொட்டகை மற்றும் சிறப்பு விருந்தினர்கள் வழித்தடத்தில் நிரந்தரக் கொட்டகை ரூ.1,55,34,000/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சத்து முப்பத்து நான்காயிரம் மட்டும்) மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், குத்தம்பாக்கம் கிராமத்தில் 152 ஏக்கர் பரப்பளவு நிலம் தேர்வு செய்யப்பட்டு, அதிநவீன திரைப்பட நகரம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, சென்னை தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் ரூபாய் 39.33 கோடி மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய மூன்று படப்பிடிப்புத் தளங்கள் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

**செய்தித் துறையின் அறிவிப்புகள் – தொடர் நடவடிக்கைகளின் விவரங்கள்**

சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்குத் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் ரூ.2,53,26,974/– (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து நான்கு மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச் சிலையும், திருமூர்த்தி அணை அருகில் அரங்கமும் அமைக்கும் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டப் பணிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் இறந்தவர்களுக்காக ஆழியாறு அணை பூங்காவில் நினைவு மண்டபம் ரூ.2,29,68,907/- (ரூபாய் இரண்டு கோடியே இருபத்து ஒன்பது இலட்சத்து அறுபத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஏழு மட்டும்) மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியில் உள்ள நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு ஒன்றிய, மாநில அரசுகளின் மேனாள் அமைச்சர் "சி.சுப்பிரமணியம் வளாகம்" எனப் பெயர் சூட்டப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளன.

இவ்வளாகத்தில் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர், வி.கே.பழனிச்சாமி கவுண்டர், மேனாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்பிரமணியம், தொழிலதிபர் அருட்செல்வர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுடன் கூடிய அரங்கம் ரூ.4,28,71,010/- (ரூபாய் நான்கு கோடியே இருபத்து எட்டு இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து பத்து மட்டும்) மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வரங்கத்தில் விவசாயப் பெருமக்களுக்குப் பயிற்சிகள், கருத்தரங்கங்கள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த ஏதுவாக தரைத்தளம், மேல்தளம் கொண்ட அரங்கம் கட்டப்பட்டு, தரைத்தள அரங்கத்திற்கு "வி.கே.பழனிச்சாமி அரங்கம்" எனவும், மேல்தள அரங்கத்திற்கு தொழிலதிபர் அருட்செல்வர் "பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அரங்கம்" எனவும் பெயர் சூட்டப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை மாகாணத்தின் மேனாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் சேவைகளை நினைவுகூரும் வகையில் அவர்களின் பெயரில் நாமக்கல் நகரில் அரங்கம் ரூ.2,50,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கீழ்பவானி பாசனத் திட்டம் கொண்டுவர முக்கியக் காரணகர்த்தாவாக இருந்த உத்தமத் தியாகி ஐயா ஈஸ்வரன் அவர்களுக்கு ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம் ரூ.2,60,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் அமைச்சரவையில் வேளாண்துறை அமைச்சராகச் சிறப்புடன் பணியாற்றிய ஏ.கோவிந்தசாமி அவர்களின் நினைவாக விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் அவருடைய திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் ரூ.4,00,00,000/- (ரூபாய் நான்கு கோடி மட்டும்) மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு மயிலாடுதுறையில் அரங்கம் மற்றும் சிலை ரூ.3,00,00,000/- (ரூபாய் மூன்று கோடி மட்டும்) மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

செய்தி மக்கள் தொடர்புத் துறையில் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர்த் தியாகிகள், தமிழ் அறிஞர்கள், முக்கியத் தலைவர்களின் மணிமண்டபங்கள், நினைவகங்கள், அரங்கங்கள் ஆகியவற்றில் அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஒளிப்படத் தொகுப்புகள் (Photo Album), அத்தலைவர்கள் எழுதிய புத்தகங்கள், அத்தலைவர்களைப் பற்றி வெளிவந்துள்ள புத்தகங்கள் அனைத்தும் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

அத்தலைவர்களின் பங்களிப்பினை விளக்கும் வகையில் குறும்படங்களை ஒளிபரப்பிட ஏதுவாக, முதற்கட்டமாக 15 மணிமண்டபங்களில் அகண்ட திரைத் தொலைக்காட்சிகள் நிறுவப்பட்டுள்ளன, மேலும், மணிமண்டபங்களை 360 டிகிரியில் புகைப்படம் எடுத்துப் பொதுமக்கள் பயனடைந்திடும் வகையில், சமூக ஊடகங்கள் மற்றும் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அனைத்து மணிமண்டபங்களையும் எளிதில் கண்டு களித்திடும் வகையில் அம்மணிமண்டபங்களுக்கான இணையதளப் பக்கங்களுக்கு விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code) உருவாக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் ரூ.1,25,24,447/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சத்து இருபத்து நான்காயிரத்து நானூற்று நாற்பத்தேழு மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன.

"பூம்புகார் பெருந்தச்சன்" என்று சிற்பிகளால் சிறப்பிக்கப்பட்ட, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், உலக மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் கலை நுணுக்கத்தோடு ஆசியாவிலேயே மிகப்பெரிய, நடுவிலே தூணே இல்லாத அரங்கம், திருவாரூர் ஆழித் தேரையே சென்னை மாநகருக்குக் கொண்டு வந்தது போல் அழகிய சிற்பத்தேருடன், புகழ்பெற்ற சிற்பியான கணபதி ஸ்தபதியைக் கொண்டு நுணுக்கமான திட்டமிடலுடன் காண்போரைக் கவரும் வண்ணம் வள்ளுவர்

கோட்டத்தினை வடிவமைத்தார்கள். அவ்வள்ளுவர் கோட்டத்தினை நவீன வசதிகளுடன் மேம்படுத்திட, புதிய கட்டுமானங்கள் மற்றும் புனரமைப்புப் பணிகள் ரூ.80,00,00,000/- (ரூபாய் எண்பது கோடி மட்டும்) மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

திராவிட இயக்கத் தீரர்களான, மறைந்த டாக்டர் சி.நடேசனார், சர்.பிட்டி தியாகராயர், டாக்டர்.டி.எம்.நாயர் ஆகியோரின் சிறப்புகள், தொண்டுகள், பெருமைகளை நினைவுகூரும் வகையிலும், எதிர்காலத் தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையிலும் திராவிட இயக்கச் சரித்திர நிகழ்வுகளைத் தாங்கி ஒரு வரலாற்று மாடமாகத் திராவிட இயக்கத் தீரர்கள் கோட்டம் சென்னை, அண்ணாசதுக்கத்தில் அமைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சுதந்திரப் போராட்ட வீரர் வெண்ணி காலாடி அவர்களுக்குத் தென்காசி மாவட்டத்தில் ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாருக்குப் பெருந்துணையாக நின்ற வீராங்கனை குயிலி அவர்களுக்குச் சிவகங்கையில் ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன

சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களுக்குச் சிவகங்கை மாவட்டத்தில் ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன

சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி கொடிகாத்த திருப்பூர் குமரன் அவர்களுக்கு ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் ரூ.3,00,00,000/- (ரூபாய் மூன்று கோடி மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைத்திடும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

தமிழ் மொழி மீது தீராத பற்றுக் கொண்டு, இந்தித் திணிப்பினை எதிர்த்துப் போராடி உயிர்த் தியாகம் செய்த கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டத்தில் ரூ.3,00,00,000/- (ரூபாய் மூன்று கோடி மட்டும்) மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைத்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## அரசு விழாக்கள்

நம் தாய்த் திருநாடாம் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகத் தங்கள் இன்னுயிரைத் துச்சமென நினைத்துத் தியாகங்கள் செய்த தன்னிகரில்லாத் தலைவர்களையும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களையும், செம்மொழி, அமுதமொழி எனச் சிறப்புப் பெற்ற நம் தாய்மொழியாம் தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்த அறிஞர் பெருமக்களைப் போற்றிப் புகழ்ந்திடவும், அவர்களது நோக்கங்கள் மற்றும் உயரிய சிந்தனைகளை, அவர்களின் தியாகங்களை, தொண்டுகளை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளவும் அவர்களது பிறந்த நாள் விழாக்கள் மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசின் சார்பில் நடத்தப்படும் விழாக்களில் மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்று, தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலைகள் அணிவித்தும், திருவுருவப்

படங்களுக்கு மலர் தூவியும், மரியாதையும் செலுத்துப்பட்டு வருகிறது. சென்னை மாவட்டத்தில் 41 தலைவர்களுக்கும், மாவட்டங்களில் 79 தலைவர்களுக்கும் என மொத்தம் 120 தலைவர்களுக்குப் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டுள்ள அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

**மாநில அளவில் நடத்தப்படும் விழாக்கள்**

| வ. எண் | நாள் | விழா |
|---|---|---|
| 1 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா |
| 2 | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் விழா |
| 3 | ஜனவரி 30 | அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள் விழா |
| 4 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் விழா |
| 5 | பிப்ரவரி 24 | செல்வி ஜெ ஜெயலலிதா பிறந்த நாள் விழா |
| 6 | ஏப்ரல் 14 | டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த நாள் விழா |
| 7 | ஏப்ரல் 17 | தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா |
| 8 | ஏப்ரல் 27 | சர்.பிட்டி.தியாகராயர் பிறந்த நாள் விழா |
| 9 | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழா |
| --- | --- | --- |
| 10 | சித்திரை முழு நிலவு நாள் | சித்திரை முழு நிலவு நாளன்று கண்ணகி சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவப் படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர்தூவி மரியாதை செய்தல் |
| 11 | மே 20 | அயோத்திதாச பண்டிதர் பிறந்த நாள் விழா |
| 12 | ஜுன் 12 (சித்திரை இறுதி வெள்ளி) | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா |
| 13 | ஜூன் 3 | முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா |
| 14 | ஜூன் 5 | கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் பிறந்த நாள் விழா |
| 15 | ஜூன் 24 | கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா |
| 16 | ஜூன் 25 | முன்னாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் திரு. வி.பி.சிங் பிறந்த நாள் விழா |
| 17 | ஜூன் 26 | ம.பொ. சிவஞானம் பிறந்த நாள் விழா |
| 18 | ஜூலை 7 | இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள் விழா |
| 19 | ஜூலை 11 | வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழா |
| 20 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா |
| 21 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் |
| 22 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி சங்கரலிங்கனார் |

| வ. எண் | நாள் | விழா |
|---|---|---|
| 23 | ஜூலை 17 | தியாகிகள் தினம்,<br>தியாகி செண்பகராமன் |
| 24 | ஆகஸ்டு 3<br>(ஆடி மாதம்<br>18ஆம் நாள்) | தீரன்சின்னமலை நினைவு நாள் |
| 25 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார்<br>பிறந்த நாள் விழா |
| 26 | செப்டம்பர் 11 | மகாகவி பாரதியார்<br>நினைவு நாள் – மகாகவி நாள் |
| 27 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |
| 28 | செப்டம்பர் 16 | இராமசாமி படையாட்சியார்<br>பிறந்த நாள் விழா |
| 29 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா |
| 30 | செப்டம்பர் 27 | டாக்டர் சி.பா. ஆதித்தனார்<br>பிறந்த நாள் விழா |
| 31 | செப்டம்பர் 29 | முன்னாள் சென்னை மேயர் சிவராஜ்<br>பிறந்த நாள் விழா |
| 32 | அக்டோபர் 1 | நடிகர் திலகம் சிவாஜிகணேசன்<br>பிறந்த நாள் |
| 33 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள்<br>பிறந்த நாள் விழா |
| 34 | அக்டோபர் 24 | மருதுபாண்டியர் நினைவு நாள் |
| 35 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்<br>பிறந்த நாள் விழா |
| 36 | நவம்பர் 8 | தமிழறிஞர் வீரமாமுனிவர்<br>பிறந்த நாள் விழா |
| 37 | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு<br>பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழா |
|---|---|---|
| 38 | நவம்பர் 18 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் நினைவு நாள்– தியாகத் திருநாள் |
| 39 | நவம்பர் 23 | கவிஞர் சுரதா பிறந்த நாள் விழா |
| 40 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா |
| 41 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா |

## மாவட்ட அளவில் நடத்தப்படும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 1 | ஜனவரி 3 | வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்த நாள் விழா | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 2 | ஜனவரி 15 | ஜான் பென்னிகுயிக் பிறந்த நாள் விழா | லோயர் கேம்ப், தேனி மாவட்டம் |
| 3 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா | காமராஜர் சாலை, சென்னை மாவட்டம் |
| 4 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா | சேலம், சேலம் மாவட்டம் |
| 5 | ஜனவரி 18 (தை 5ஆம் தேதி) | காலிங்கராயன் அவர்கள் வாய்க்காலை வெட்டி நாட்டுக்கு அர்ப்பணித்த நாள் | காலிங்கராயன் அணைக்கட்டு, ஈரோடு மாவட்டம் |
| 6 | ஜனவரி 26 | தியாகி சங்கரலிங்கனார் பிறந்த நாள் விழா | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 7 | ஜனவரி 27 | சுவாமி சகஜானந்தா பிறந்த நாள் விழா | சிதம்பரம், கடலூர் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 8 | பிப்ரவரி 1 | ஓமந்தூர் பி. இராமசாமி ரெட்டியார் பிறந்த நாள் விழா | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |
| 9 | பிப்ரவரி 6 | உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு பிறந்த நாள் விழா | வையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். |
| 10 | பிப்ரவரி 7 | மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் பிறந்த நாள் விழா | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 11 | ஜனவரி 18 (தைப்பூசத் திருநாள்) | திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழா | மதுரை, மதுரை மாவட்டம் |
| 12 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்த நாள் விழா | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 13 | பிப்ரவரி 19 | தமிழ்த் தாத்தா உ.வே.சா. பிறந்த நாள் விழா | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 14 | பிப்ரவரி 22 | தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாள் விழா | தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 15 | பிப்ரவரி 24 | புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா பிறந்த நாள் விழா | சேலம் மாவட்டம் |
| 16 | மார்ச் 30 | ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள் விழா | இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 17 | ஏப்ரல் 2 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் பிறந்த நாள் விழா | வரகனேரி, திருச்சி மாநகர், திருச்சி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 18 | ஏப்ரல் 10 | தியாகி பி. சீனிவாசராவ் பிறந்த நாள் விழா | திருத்துறைப் பூண்டி, திருவாரூர் மாவட்டம் |
| 19 | ஏப்ரல் 13 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த நாள் விழா | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 20 | ஏப்ரல் 16 | வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 21 | ஏப்ரல் 17 | தீரன் சின்னமலை பிறந்த நாள் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 22 | ஏப்ரல் 23 (சித்ரா பௌர்ணமி) | வள்ளல் அதியமான் பிறந்த நாள் விழா | அதியமான் கோட்டை, தருமபுரி மாவட்டம் |
| 23 | மே 7 | இராபர்ட் கால்டுவெல் பிறந்த நாள் விழா | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 24 | மே 13 (சித்திரை இறுதி வெள்ளி) | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |
| 25 | மே 13 (சித்திரை இறுதி வெள்ளி) | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | பாஞ்சாலங்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம் |
| 26 | மே 23 | பெரும்பிடுகு முத்தரையர் பிறந்த நாள் விழா | திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 27 | மே 31 | சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் பிறந்த நாள் விழா | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம். |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 28 | ஜுன் 10 | வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாள் விழா | கத்தப்பட்டு ஊராட்சி, சிவகங்கை மாவட்டம். |
| 29 | ஜூன் 12 | மார்ஷல் நேசமணி பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 30 | ஜூன் 16 | தியாகி விஸ்வநாததாஸ் பிறந்த நாள் விழா | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 31 | ஜூன் 18 | தியாக சீலர் கக்கன் பிறந்த நாள் விழா | மேலூர் அருகில், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 32 | ஜூன் 23 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி பிறந்த நாள் விழா | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 33 | ஜூன் 24 | கவிஞர் கண்ணதாசன் பிறந்த நாள் விழா | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 34 | ஜூலை 6 | தமிழறிஞர் பரிதிமாற்கலைஞர் பிறந்த நாள் விழா | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 35 | ஜூலை 11 | வீரன் அழகு முத்துக்கோன் பிறந்த நாள் விழா | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 36 | ஜூலை 11 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் பிறந்த நாள் விழா | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 37 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 38 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 39 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா | திருமலைச்சாலை, தியாகராயர் நகர், சென்னை |
| 40 | ஜூலை 17 | தியாகி வாஞ்சிநாதன், தியாகிகள் தினம் | செங்கோட்டை, தென்காசி மாவட்டம் |
| 41 | ஜூலை 31 | சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 42 | ஆகஸ்ட் 2, 3 (ஆடி 17, 18) | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் |
| 43 | ஆகஸ்ட் 3 (ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 44 | ஆகஸ்ட் 3 (ஆடி 18) | தீரன்சின்னமலை நினைவு நாள் | சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 45 | ஆகஸ்ட்20 | விடுதலைப் போராட்டவீரர் ஒண்டி வீரன் நினைவு நாள் | பாளையங் கோட்டை திருநெல்வேலி மாவட்டம். |
| 46 | ஆகஸ்ட்21 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 47 | ஆகஸ்ட்25 | திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் பிறந்த நாள் விழா | காட்பாடி வட்டம், காங்கேய நல்லூர், வேலூர் மாவட்டம், |
| 48 | செப்டம்பர் 1 (ஆவணி 16) | விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்த நாள் விழா | நெற்கட்டும் செவல், தென்காசி மாவட்டம் |
| 49 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 50 | செப்டம்பர் 5 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் நினைவு நாள் | விருப்பாச்சி, திண்டுக்கல் மாவட்டம் |
| 51 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 52 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | அண்ணா சதுக்கம், சென்னை |
| 53 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 54 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 55 | செப்டம்பர் 16 | இராமசாமி படையாட்சியார் பிறந்த நாள் விழா | மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம் |
| 56 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 57 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | வைக்கம், கேரள மாநிலம் |
| 58 | செப்டம்பர் 24 | டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் பிறந்த நாள் விழா | திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |
| 59 | செப்டம்பர் 25 | பகுத்தறிவு கவிராயர் உடுமலை நாராயணகவி பிறந்த நாள் விழா | உடுமலைப் பேட்டை, திருப்பூர் மாவட்டம் |
| 60 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 61 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | அனைத்து மாவட்டங்கள் |
| 62 | அக்டோபர் 4 | தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த நாள் விழா | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 63 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 64 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | சென்னிமலை, ஈரோடு மாவட்டம் |
| 65 | அக்டோபர் 7 | பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்ட தினம் | கோயம்புத்தூர் மாவட்டம் |
| 66 | அக்டோபர் 9 | பெரியவர் எம்.பக்தவத்சலம் பிறந்த நாள் விழா | காந்திமண்டபம் சென்னை மாவட்டம் |
| 67 | அக்டோபர் 10 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை பிறந்த நாள் விழா | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 68 | அக்டோபர் 23 | அமுதகவி உமறுப்புலவர் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 69 | அக்டோபர் 24 | மருதுபாண்டியர் நினைவு நாள் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 70 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா | பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 71 | நவம்பர் 1 | கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழ்நாட்டுடன் இணைந்த நாளை முன்னிட்டுமார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 72 | நவம்பர் 3 | மாமன்னர் இராசராசச் சோழன் பிறந்த நாள் விழா | பெருவுடையார் திருக்கோயில், தஞ்சாவூர், தஞ்சாவூர் மாவட்டம். |
| 73 | நவம்பர் 11 | சுயமரியாதைச் சுடரொளி என்.ஜீவரத்தினம் பிறந்த நாள் விழா | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 74 | நவம்பர் 15 | இராவ்பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் பிறந்த நாள் விழா | தூத்துக்குடி மாவட்டம் |
| 75 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 76 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 77 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | திருவல்லிக்கேணி சென்னை மாவட்டம் |
| 78 | டிசம்பர் 12 | அதங்கோட்டாசான் விழா | அதங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம் |
| 79 | டிசம்பர் 28 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் படைத் தளபதி வீரன் பொல்லான் பிறந்த நாள் விழா | மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம் |

**அரசு சார்பில் கொண்டாடப்படும் சிறப்பு விழாக்கள்:**

தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் செய்தித் துறையும் இணைந்து அய்யன் திருவள்ளுவர் பிறந்த தினமான தைத்திங்களில், திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழா ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று மிகச் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில், தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ள அறிஞர் பெருமக்களுக்குத் திருவள்ளுவர் விருது, தந்தை பெரியார் விருது, பேரறிஞர் அண்ணா விருது, அண்ணல் அம்பேத்கர் விருது, பெருந்தலைவர் காமராஜர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர்

பாரதிதாசன் விருது, தமிழ்த் தென்றல் திரு.வி.க.விருது, கி.ஆ.பெ விசுவநாதம் விருது ஆகிய விருதுகள் வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்படுகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை, தலைமைச் செயலகத்தில் 16.1.2024 அன்று நடைபெற்ற விழாவில். தமிழ்ச் சான்றோர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

**தமிழ்நாடு நாள்**

மெட்ராஸ் மாகாணம் எனப் பல ஆண்டுகளாக அழைக்கப்பட்டுவந்த தாய்த் தமிழ்நாட்டிற்கு "**தமிழ்நாடு**" எனப் பெயர் சூட்டப்பட வேண்டும் எனப் பல்வேறு மொழி அறிஞர்கள், தலைவர்கள் போராடி வந்தனர். குறிப்பாக திரு.சங்கரலிங்கனார் அவர்கள் அதற்காக 79 நாள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் 18.7.1967 அன்று சட்டப்பேரவையில் ஒருமனதாக மெட்ராஸ் மாகாணத்திற்கு "**தமிழ்நாடு**" எனப் பெயர் சூட்டினார். அன்று முதல் தமிழ்நாடு என்று அழைக்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **"ஜூலை18"** ஆம் தேதி தமிழ்நாடு நாளாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும் என அறிவித்தார்கள். அதன்படி 2022ஆம் ஆண்டு முதல் ஜூலை 18ஆம் நாள் கலைவாணர் அரங்கத்தில் "தமிழ்நாடு நாள்" சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

2023ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் நாள் சென்னை மாநிலக் கல்லூரியில் "தமிழ்நாடு நாள்" விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

**நிறைவேற்றப்பட்ட அறிவிப்புகள்**

2022-2023ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட, கலைஞர் அவர்கள் பிறந்த நாளான ஜூன் 3ஆம் நாள் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

**ஏனைய விழாக்கள்**

மாமன்னர் இராசராசச் சோழனின் பிறந்த நாளை 2022ஆம் ஆண்டு முதல் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண்.178, தவ(ம)செ(விழா)த் துறை, நாள் 3.11.2022)

ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட மாவீரன் "வாளுக்குவேலி அம்பலம்" வீரத்தையும், நினைவையும் போற்றும் வகையில் அன்னாரது பிறந்த நாளான ஜூன் 10–ஆம் நாள் அரசு விழாவாக மாண்புமிகு தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, 2023–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. (அரசாணை (நிலை) எண். 78, தவ(ம) செ(விழா)த் துறை, நாள் 1.6.2023)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல்படி, செய்தி மக்கள் தொடர்புத் துறையில் உள்ள சுதந்திரப் போரட்ட வீரர்கள், மொழிப்போர்த் தியாகிகள், தமிழ் அறிஞர்கள், முக்கியத் தலைவர்களின் மணிமண்டபங்கள், நினைவகங்கள், அரங்கங்கள் ஆகியவற்றில் அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஒளிப்படத் தொகுப்புகள் (Photo Album) புத்தகங்கள் காட்சியகப்படுத்தப்பட்டு விரைவுத் துலங்கல் குறியீடு

(QR Code) பொருத்தி மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களால் திறப்பு விழா நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அரசாணை (ப) எண். 166, தவ(ம) செ(விழா)த்துறை, நாள் 13.12.2023)

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு இலச்சினை (Logo) வெளியீட்டு விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் 2.6.2023 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக, மகாத்மா காந்தியடிகளின் பேரன், மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் திரு. கோபால கிருஷ்ண காந்தி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை அவரது புகழ் நிலைத்திடும் வகையிலும், பொதுமக்கள் (ம) இளைஞர்கள் பயன்பெறும் வகையிலும் சிறப்பாகக் கொண்டாடிட மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில்

இணைத் தலைவர்கள், உறுப்பினர் செயலர் (ம) உறுப்பினர்கள் கொண்ட 12 குழுக்கள் அமைத்து ஆணையிடப்பட்டது. (அரசாணை (நிலை) எண்.98, தவ(ம)செ(விழா), நாள் 22.6.2023) இக்குழுக்களால் தமிழ்நாடு முழுவதும் மாநில அளவிலான நிகழ்ச்சிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் குறித்த கண்காட்சிகள், கலைநிகழ்ச்சிகள், மேடைநிகழ்ச்சிகள், பட்டிமன்றம் / கருத்தரங்கம் / கவியரங்கம் போன்றவைகளும், மாவட்ட அளவிலான நிகழ்ச்சிகளில் பள்ளிகளில் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி – வினா போட்டி, ஓவியப்போட்டி போன்ற நிகழ்ச்சிகளும், இளைஞர்களுக்கான குழு விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3.9.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததற்கிணங்க, 2024ஆம் ஆண்டு முதல் சென்னையில் திராவிடப் பேரொளி பண்டிதர் அயோதிதாசர் பிறந்த நாளான மே 20ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. (அரசாணை (நிலை) எண்.88, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி / விழாக்கள்)த்துறை, நாள் 11.6.2024)

# செய்தி வெளியீட்டுப் பிரிவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், செய்தி குறிப்புகள், செய்தி வெளியீடுகளை பொதுமக்கள் உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மிக முக்கியமான பிரிவாகச் செயல்படும், செய்தி வெளியீட்டுப் பிரிவு அனைத்து நாள்களிலும் இடைவிடாமல் செயல்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்களின் செய்திக் குறிப்புகள், அரசின் செய்தி வெளியீடுகள், அறிவிப்புகள், நலத்திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், சாதனைகள், அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் செய்தி / தகவல் விவரங்கள், நிகழ்ச்சி குறித்த புகைப்படங்கள், காணொலிப் பதிவுகள் ஆகியவை தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி முகமைகள், காலமுறை இதழ்கள், பிற மாநில நாளிதழ்கள், இணையதளச் செய்தி நிறுவனங்கள் என 325க்கும் மேற்பட்ட ஊடகங்களுக்கு உடனுக்குடன் செய்தி வெளியீட்டுப் பிரிவின் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கப்படுகின்றது.

மேலும், அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் மின்னஞ்சல் மூலம் உடனுக்குடன் அனுப்பிவைக்கப்பட்டு, மாவட்ட அளவிலும் செய்திகள், புகைப்படங்கள் வெளிவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்களின் செய்தியாளர் கூட்டங்கள் நடத்திடத் தேவையான அனைத்துப் பணிகளும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அமைச்சர்கள், அரசுத் துறைகளின் செயலாளர்கள் பங்கேற்கும் அரசு சார்ந்த விழாக்கள், முக்கியப் பிரமுகர்கள் வருகை தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்குச் செய்தியாளர்கள், தொலைக்காட்சிப் பிரிவினருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கிடும் வகையில், ஒருங்கிணைப்புப் பணிகள் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தலைமையிடத்திலிருந்து வெளியிடப்படும் முக்கிய அறிவிப்புகள், செய்தி வெளியீடுகள், முக்கிய நிகழ்வுகள் தொடர்பான செய்திகள், காணொலிப் பதிவுகள், புகைப்படங்கள் அனைத்தும் அதிநவீன முறையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின்

**www.dipr.tn.gov.in** எனும் வலைதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றப்பட்டு உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் செய்திகளை தெரிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாவட்டங்களில் கலந்து கொள்ளும் அரசு நிகழ்ச்சிகள், விழாக்கள், ஏனைய நிகழ்ச்சிகள் குறித்த செய்திகளும், புகைப்படங்களும் பொதுமக்கள் அனைவரும் உடனுக்குடன் அறிந்துக்கொள்ளும் வகையில் சம்பந்தப்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம் தலைமையிடத்துச் செய்தி வெளியீட்டுப் பிரிவில் பெறப்பட்டு, அவை தமிழ்நாடு முழுவதும் நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், வானொலிகள் மூலமாகப் பொது மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் பணிகளைச் செய்தி வெளியீட்டுப் பிரிவு சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

## சமூக ஊடகப் பிரிவு

இன்றைய இளைய தலைமுறையினர் தகவல் தொடர்பில் உடனுக்குடன் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள நண்பர்கள் மற்றும் ஆளுமைகளின் செயல்பாடுகளை அறிந்து கொள்ள சமூக வலைத்தளங்களை அதிக அளவில் பயன்படுத்தி வருகிறார்கள்.

2021ஆம் ஆண்டு மே மாதம் முதல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடுகள், சாதனைகள், நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றை எக்ஸ் – கீச்சகம் (X–Twitter), படவரி (Instagram), முகநூல் (Facebook) மற்றும் வலையொளி (Youtube) ஆகிய சமூக ஊடகங்களின் வாயிலாக இளைஞர்கள் மற்றும் பொது மக்களுக்கு உடனுக்குடன் கொண்டு சேர்க்கும் வகையில் சமூக ஊடகப் பணிகளை ஒருங்கிணைப்பதற்கு 'சமூக ஊடகப் பிரிவு' என்ற தனிப்பிரிவு உருவாக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் மற்றும் தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின் முக்கிய அம்சங்கள் மக்களிடம் எளிதாக சென்றடையும் வண்ணம் சமூக ஊடக அட்டைகளாக (Social Media Cards) வடிவமைத்து அவற்றையும் மற்றும் வீடியோக்களும் X–Twitter, Facebook, Instagram, Whatsapp மற்றும் YouTube ஆகியவற்றில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

இதுமட்டுமல்லாமல், பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட இதர மாநகராட்சிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மின்னணு விளம்பரத் திரைகளிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் மாவட்டங்களிலுள்ள மின்னணு விளம்பரத் திரைகளிலும் சமூக ஊடக அட்டைகள் மற்றும் வீடியோக்கள் திரையிடப்பட்டு வருகின்றன.

**புதிய புலனம் (Whatsapp) சேனல்**

அடுத்தகட்ட முன்னெடுப்பாக அதிகாரப்பூர்வமான புலனம் (Whatsapp) சேனல் "TNDIPR. Govt of Tamil Nadu" என்ற பெயரில் 10.6.2024 அன்று தொடங்கப்பட்டுள்ளது. அதில் பொதுமக்கள் இணைந்து அரசின் திட்டங்கள் மற்றும் செய்திகளை அறிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மேற்கண்ட சமூக ஊடக வலைதளப் பக்கங்களைக் காணச் சிறிய அளவில் கொடுக்கப்பட்டுள்ள துலங்கல் குறியீட்டை (QR Code) அனைவரும் எளிதில் ஸ்கேன் செய்து பயனடைந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் அன்றாட நிகழ்ச்சிகள், சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் அனைத்து நிகழ்ச்சிகளையும் ஒளிப்பதிவு செய்து வெளியிடுதல், அரசினால் அறிவிக்கப்படும் நலத்திட்டங்கள் பற்றிய விவரங்களையும், அவற்றைப் பெறும் வழிமுறைகளையும் பொதுமக்கள் அறியும் வண்ணம் வெளியிடுதல், மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்களால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளைக் குறும்படங்கள் வாயிலாக வெளியிடுதல் ஆகிய பணிகளைத் தமிழ்நாடு திரைப்படப்பிரிவு செவ்வனே மேற்கொண்டு வருகிறது.

இப்பிரிவின் வாயிலாக ஒளிப்பதிவு செய்து பதிவு செய்யப்படும் அனைத்து நிகழ்ச்சித் தொகுப்புகளையும் பொது மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் ஊடக மையத்தின் வாயிலாகச் செய்தி நறுக்குகளாக அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளுக்குப் பதிவேற்றம் செய்து ஒளிபரப்புச் செய்யும் பணிகளையும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

அரசின் முக்கிய விழாக்கள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்குபெறும் நிகழ்வுகள் ஆகியவற்றை ஒளிப்பதிவு செய்து, பின்னணிக் குரல் மற்றும் இசையுடன் கூடிய செய்தித் தொகுப்புகளாகத் தயாரித்து தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களிலும் உள்ள மின்னணு விளம்பரத் திரைகளிலும், சமூக வலைதளங்களிலும் உடனுக்குடன் பதிவேற்றம் செய்து பொது மக்கள் காணும் வகையில் ஒளிபரப்பிடும் பணிகளை அனைவரும் பாராட்டும் வகையில் செய்து வருகிறது.

தமிழ்நாடு அரசின் மக்கள் நலத்திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், சாதனைகள் மற்றும் அவ்வப்போது நிகழும் சமூக மாற்றங்களுக்கேற்பவும், சமூக நலன் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் காணொலிச் செய்தி மலர், குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்களைத் தற்போது வளர்ந்துள்ள நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கேற்பத் திரையரங்கப் பதிப்புகளாகத் தயாரித்து, அவற்றை அனைத்து டிஜிட்டல் சினிமா திரையரங்குகள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் உள்ள மின்னணு

விளம்பரத்திரைகள் மற்றும் அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள நவீன மின்னணு வாகனத்தின் விளம்பரத்திரைகள் ஆகியவற்றில் ஒளிபரப்பி வருகின்றது.

**சமூக வலைதளம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு 16.7.2021இல் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் You Tube சேனல் புதிதாகத் தொடங்ககப்பட்டு அரசால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் அடங்கிய குறும்படங்களை சமூக ஊடகங்களில் உடனுக்குடன் சிறப்பாகப் பதிவேற்றம் செய்து வருகிறது.

அரசு நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒளிப்பதிவு செய்து, பின்னணிக் குரல் கொடுத்து, இசையமைத்து, செய்தித் தொகுப்புகளாகத் தயாரித்து, அவற்றைத் தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் சமூக வலைதளமான வலையொளி (Tamil Nadu Films Division – You Tube) மூலமாக உடனுக்குடன் பதிவேற்றம் செய்வதுடன், தமிழ்நாடு மட்டுமல்லாமல் உலக மக்கள் அனைவரிடமும் இச்செய்திகள் விரைவாகச் சென்றடையும் விதமாக ஒளிபரப்பி வருகிறது. 16.7.2021 முதல் இதுநாள் வரை 3,200 காணொலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டு 60 இலட்சம் பார்வையாளர்களால் பார்வையிடப்பட்டுள்ளது.

முக்கிய தலைவர்கள், முன்னாள் முதலமைச்சர்கள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் அடங்கிய 7,700 ஒளிநாடாக்கள் எண்மியமாக்கப்பட்டு (Digitalization) தமிழ்நாடு திரைப்படப்பிரிவில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தலைமைச் செயலகத்தில் செயல்பட்டு வரும் ஊடக மையத்தை மேம்படுத்தும் வகையில், நவீன அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு ஏற்ப ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து தற்போது அவை அனைத்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**நிறைவேற்றப்பட்ட பணிகள்**

அரசு நிகழ்ச்சிகளில் எடுக்கப்பட்ட கருப்பு வெள்ளை மற்றும் வண்ணப் புகைப்பட நெகடிவ் சுருள்கள் டிஜிட்டல் முறையில் பாதுகாக்கவும் தற்பொழுது எடுக்கப்படும் புகைப்படங்களை ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆவணப்படுத்தியும் தற்பொழுது எடுக்கப்படும் புகைப்படங்களைப் பாதுகாப்பான முறையில் சேமித்து ஆவணப் படுத்துவதற்காக கணனிசர்வர் மற்றும் அதற்கான துணை உபகரணங்கள் வாங்குவதற்கும் தேவையான பராமரிப்பு பணிகளை ஒப்பந்தமுறையில் எடுக்க ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டிலும் பணிகள் நிறைவேற்றப்பட்டது.

2022–2023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தமிழ்நாடு திரைப்படப்பிரிவில் மின்னணு வீடியோ ஆவணக் காப்பகம் (Digital e–Library) அமைக்கும் பணியில் மீதமுள்ள 3,700 கேசட்டுகளை ரூ.43,66,000/– மதிப்பீட்டில் எண்மியமாக்க அறிவிக்கப்பட்டு, ரூ.32,60,366/– (ரூபாய் முப்பத்து இரண்டு இலட்சத்து அறுபதாயிரத்து முன்றூற்று அறுபத்து ஆறு மட்டும்) மதிப்பீட்டில் மேற்குறிப்பிட்ட கேசட்டுகள் எண்மியப்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் ஊடக மையத்திற்கு புதிய நவீன தொழில்நுட்ப கருவிகள் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

# புகைப்படப்பிரிவு

தலைமைச் செயலகத்தில் இயங்கிவரும் புகைப்படப் பிரிவில் உள்ள புகைப்படக்காரர்களைக் கொண்டு தலைமையிடம் மற்றும் தமிழ்நாடு முழுவதும் மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர், மாண்புமிகு இந்திய குடியரசுத் துணைத்தலைவர், மாண்புமிகு இந்திய பிரதமர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சிகளில் அதிநவீன புகைப்பட கருவிகள் மூலம் புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. மாவட்டங்களில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள புகைப்படக்காரர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து அரசு நிகழ்ச்சிகளின் புகைப்படம் எடுக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தலைமைச் செயலகப் புகைப்படக்காரர்களால் எடுக்கப்படும் புகைப்படங்கள் தலைமைச் செயலகச் செய்தி வெளியீட்டுப் பிரிவின் மூலம் ஊடகங்களில் வெளியிடுவதற்காக அனுப்பப்படுவதுடன், பொது மக்களின் பார்வைக்காகத் தலைமைச் செயலகத்திலும், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்திலும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

அதுபோலவே, மாவட்டங்களில் உள்ள புகைப்படக்காரர்களால் எடுக்கப்படும் முக்கிய புகைப்படங்கள், அந்தந்த மாவட்டங்களில் இயங்கி வரும் ஊடகங்களுக்கு அனுப்பப்படுவதுடன், அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள விளம்பரப் பலகைகளிலும், முக்கிய அரசு நிகழ்ச்சிகளில் நடத்தப்படும் சிறு புகைப்படக் கண்காட்சிகளிலும் பொது மக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்படுகின்றன. நமது துறையின் மூலம் வெளியிடப்படும் தமிழரசு இதழில் தமிழ், ஆங்கில பதிப்புகளில் அனைத்துக் கட்டுரைகளும் வாசகர்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் புகைப்படப் பிரிவின் மூலம் எடுக்கப்படும் புகைப்படங்களுடன் வெளியிடப்பட்டு வருகின்றன.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த புதிய திட்டங்கள் தொடர்பான புகைப்படங்கள் அரசின் சாதனை மலர்கள் மற்றும் காலப் பெட்டகத்திலும் இடம்பெற்று பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் வெளியிடப்பட்டு வருகின்றன.

அனைத்து அரசு நிகழ்ச்சிகளின் புகைப்படங்களும் எதிர்காலப் பயன்பாடு கருதி வன் வட்டுகள் (Hard Disc) மூலம் ஆவணப்படுத்தி சேமிக்கப்பட்டு வருகின்றன.

## மேற்கோள் பிரிவு

தலைமைச் செயலகத்தில் செயல்பட்டு வரும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மேற்கோள் பிரிவின் மூலம் தினசரி நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் போன்றவற்றில் வெளிவரும் முக்கியச் செய்திகளை பல்வேறு வகைகளாகப் பிரித்து, துறைவாரியாக நாள்தோறும் அந்தந்தத் துறை அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் தலையாய பணியினை சிறப்புடன் செய்து வருகின்றது.

இப்பிரிவில் காலை மற்றும் மாலை நாளிதழ்கள், காலமுறை இதழ்களில் வெளியாகும் முக்கியச் செய்திகள், அரசின் சாதனைகள், திட்டங்களின் மூலம் பயன் அடைந்த பயனாளிகளின் கருத்துகள் செய்தி நறுக்குகளாகத் தொகுக்கப்பட்டு நாள்தோறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்குக் கோப்பு வடிவில் அனுப்பப்பட்டு வருகின்றன. இதேபோன்று தலைமைச் செயலாளர் மற்றும் அரசுத்துறைச் செயலாளர்களின் பார்வைக்காகவும், நடவடிக்கைக்காகவும் செய்தி நறுக்குகள் நாள்தோறும் அனுப்பப்பட்டு வருகின்றன.

மேலும், இப்பிரிவில் அரசுத்துறைகள் குறித்து வெளிவரும் குறைபாடுகள், கோரிக்கைகள், எதிர்மறைச் செய்திகள் உள்ளறி (Scan) செய்யப்பட்டு, தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசுத்துறைச் செயலாளர்களின் பார்வைக்காகவும், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பார்வைக்காகவும், உடனடி நடவடிக்கைகாகவும் புலனம் (WhatsApp) வாயிலாக உடனுக்குடன் அனுப்பி வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முக்கியமான நாளிதழ்கள், முறையாகத் தொகுக்கப்பட்டு, புத்தகக் கட்டுமானம் (Binding) செய்யப்பட்டு எதிர்காலத் தேவைக்கென இப்பிரிவில் ஆவணங்களாகப் பாதுகாக்கப்படுகின்றன.

சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் காலங்களிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், துறைச் செயலாளர்கள் ஆகியோருக்கு நாளிதழ்களில் வெளியாகின்ற முக்கியச் செய்தி நறுக்குகள் தேவைப்படும்போது உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், செய்தியாளர்கள் சந்திப்பு, அரசின் திட்டங்கள், சாதனைகள், அரசு நலத்திட்ட உதவிகள், பல்வேறு தலைவர்களின் கருத்துக்கள், விமர்சனங்கள், நாளிதழ்களின் கட்டுரைகள், தலையங்கங்கள் உட்பட அனைத்துச் செய்தி நறுக்குகளும் தொகுக்கப்பட்டு கணினியில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

# கள விளம்பரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் கடைக்கோடி மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில் விளம்பரப் பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டு, கள விளம்பரப்பிரிவு செயல்பட்டு வருகின்றது.

## மண்டல அலுவலர்கள்

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களை 6 மண்டலங்களாகப் பிரித்து, அரசின் திட்டங்களை விரைவாகவும், சிறப்பாகவும் மாவட்டங்களில் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும் பொருட்டு, செய்தி மக்கள் தொடர்புத் துறையில் ஆறு மண்டல (Regional) இணை இயக்குநர்கள் நியமிக்கப்பட்டு, கூடுதலாகப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

| வ. எண் | மண்டலம் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | சென்னை | சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை |
| 2. | திருச்சி | திருச்சி, விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், கடலூர், கரூர், கள்ளக்குறிச்சி |
| 3. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், நாமக்கல், ஈரோடு, தருமபுரி, திருப்பூர், கிருஷ்ணகிரி |
| 4. | திருநெல்வேலி | திருநெல்வேலி, கன்னியாகுமரி, விருதுநகர், தூத்துக்குடி, தென்காசி |
| 5. | மதுரை | மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை |
| 6. | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை |

## மின்னணு விளம்பரத் திரைக்காட்சி வாகனம்

நவீன மின்னணுத் திரை பொருத்திய விளம்பரத் திரைக்காட்சி வாகனங்கள் 32 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு மக்கள் அதிகம் கூடும் இடங்கள், அரசு விழாக்கள் நடைபெறும் இடங்கள் போன்றவற்றில் அரசின் திட்டங்கள், சாதனைகள், கொள்கைகள் மற்றும் அறிவிப்புகள் தொடர்பான விழிப்புணர்வுக் குறும்படங்கள் மற்றும் செய்திமலர் தொகுப்புகள் திரையிடப்பட்டு மக்கள் கண்டு பயனடைந்திடும் வகையில் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின்னணு **விளம்பரத் தொலைக்காட்சிகள்**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வாயிலாகத் தயாரிக்கப்பட்டுள்ள அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்கள் நாள்தோறும் அதிகளவில் பொதுமக்கள் வந்து செல்லும் இடங்களான 32 மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்கள், புதுதில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் 'மின்னணு விளம்பரத் தொலைக்காட்சி' (LED TV) மூலம் திரையிடப்பட்டு, கள விளம்பரப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பிரம்மாண்டமான மின்னணு விளம்பரச் சுவர்கள்**

செய்தித்துறை வரலாற்றில் முதல் முறையாக, அதிநவீன தொழில்நுட்பத்தில் அரசின் செய்தி மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொது மக்களைச் சென்றடையும் வகையில் 21 மாநகராட்சிகளில் பொது மக்கள் அதிகம் கூடும் முக்கிய பேருந்து நிலையங்களில் பெரிய அளவிலான மின்னணு விளம்பரத் திரைகள் அமைத்து விளம்பரப் பணி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது, அதன் முதற்கட்டமாக, காஞ்சிபுரம், தாம்பரம், மதுரை,

திருச்சிராப்பள்ளி, கடலூர், திருப்பூர், திருநெல்வேலி, வேலூர், கும்பகோணம், திண்டுக்கல் ஆகிய 10 மாநகராட்சிகளின் முக்கிய பேருந்து நிலையத்தில் 16 அடி அகலம் X 10 அடி உயரம் அளவிலான பெரிய மின்னணு விளம்பரத் திரைகள் (Digital Wall) அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் மற்றும் அரசு விழாக்கள் தொடர்பான வீடியோக்கள் தலைமையிடத்திலிருந்து இணைய வழியில் இந்த மின்னணு விளம்பரத் திரைகளில் உடனுக்குடன் திரையிடப்பட்டு விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## விளம்பரம்

தமிழ்நாடு அரசின் சாதனைகள், திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சமூகநலப் பணிகளை மக்கள் முழுமையாக அறிந்து பயன்பெறும் வகையில் இத்துறையின் மூலம் நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள், சமூக ஊடகங்கள் ஆகியவற்றில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் ஏனைய பணிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி, வரைகலை மற்றும் நில எடுப்பு விளம்பரங்கள் இத்துறையின் மூலம் நாளிதழ்களில் வெளியிடப்படுகின்றன.

அரசுத் துறைகள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை, நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடும் மையமாக செய்தி மக்கள் தொடர்புத் துறை செயல்பட்டு வருகிறது

விளம்பரத்தின் தன்மை மற்றும் அவை சென்றடைய வேண்டிய பகுதி, தகவல் கொண்டு சென்று சேர்க்கப்பட வேண்டிய மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

## ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள்

அரசு விளம்பரங்கள் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் கூடுதல் செலவு ஏதுமின்றி நவீன மின்னணுத் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, அனைத்து ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களும் தேசியத் தகவல் மையத்தின் (NIC) வழியாக www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. தேவைப்படுவோர் ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை விலையேதுமின்றிப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் அரசு நிருணயித்துள்ள கட்டணங்களில் விளம்பரங்களாக நாளிதழ்களிலும், இலவசமாக இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பயனாக, தகுதியான அனைவரும் தமிழ்நாடு அரசு கோரும் ஒப்பந்தப்புள்ளிகளில் பாகுபாடு இன்றித் தகுதிக்கு ஏற்பப் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## ஒப்பந்தப்புள்ளிச் செய்தி மலர்கள்

அரசின் செயல்பாடுகள் அனைத்தும் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம்

மற்றும் 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் இயற்றப்பட்டு, அவற்றின் அடிப்படையில் பொதுமக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளிச் செய்தி மலர்கள் வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று வெளியிடப்படுகின்றன.

ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.50 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.50 இலட்சத்திற்கு மேல் ரூ.75 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியவை குறித்த ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளிச் செய்தி மலரிலும் ரூ.50 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.75 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகியவை பற்றிய ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் மாநில ஒப்பந்தப்புள்ளிச் செய்தி மலரிலும் வெளியிடப்படுகின்றன.

இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

## ஊடக மையம்

தலைமைச் செயலக முதன்மைக் கட்டடத்தின் தரைத்தளத்தில் ஊடகமையம் செயல்பட்டு வருகின்றது. இந்த மையத்தில் 12 LED தொலைக்காட்சிகள் நிறுவப்பட்டு, செய்தி தொலைக்காட்சிகளில் வெளிவரும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகளும், அரசு சார்பான செய்திகளும் பதிவு செய்யப்படுகின்றன. மேலும், பொது மக்களின் நலன் சார்ந்த செய்திகள் பதிவு செய்யப்பட்டு துறை அலுவலர்களுக்கு அனுப்பப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# பொருட்காட்சிப் பிரிவு

தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகளின் திட்டங்கள். சாதனைகள் மற்றும் செயல்பாடுகளைத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமம் மற்றும் நகர்ப்புற மக்கள் அறிந்து கொண்டு தேவையான தகவல்களைப் பெறுவதுடன், பொழுதுபோக்கு அம்சங்களையும் கண்டுகளித்திடும் வகையில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசுப் பொருட்காட்சிகளில் ஒன்றிய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் பங்கேற்கின்றன. இப்பொருட்காட்சிகள் மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு மட்டுமின்றி, நேரடியாகவும், மறைமுகமாகவும், பலருக்கு வேலை வாய்ப்புகளையும் அளித்து வருவது குறிப்பிடத்தக்கது. மேலும், இப்பொருட்காட்சிகளில், நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில் அரசுப் பொருட்காட்சிகளில் நாள்தோறும் கலைநிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் வழங்கப்பட்டு, அவ்வாறு நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கான மதிப்பூதியமாக நலிந்த கலைஞர்களுக்கு ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது .

தமிழ்நாட்டில், ஆண்டுதோறும் 10 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. கோயம்புத்தூர். மதுரை. சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் மற்றும் ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில் சுழற்சி முறையில் 4 மாவட்டங்களிலும் அரசுப் பொருட்காட்சி நடத்தப்படுகின்றன. 2023–2024ஆம் ஆண்டில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிகளை 5,60,517 பார்வையாளர்கள் கண்டுகளித்தனர். இதன் வாயிலாக 78 இலட்சத்து 89 ஆயிரத்து 925 ரூபாய் அரசிற்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**தனியார் பொருட்காட்சிகள்**

மாவட்டங்களில் ஐந்து நாள்களுக்கு மேல் நடத்தப்படும் தனியார் பொருட்காட்சிகளுக்கான அனுமதியானது தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடனும், பிற துறைகளின் பாதுகாப்பு, தடையில்லாச் சான்றிதழ்கள் மற்றும் முதலமைச்சர் நிவாரண நிதிக்கான வரைவோலை பெறப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. ஐந்து நாள்கள் வரையில் மாவட்ட அளவில் தனியார் பொருட்காட்சிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அளவில் உரிய முதலமைச்சர் நிவாரண நிதிக்கான வரைவோலைப் பெற்று அனுமதி வழங்கப்பட்டு

வருகிறது. 7.5.2021 முதல் 8.2.2024 வரை நடைபெற்ற தனியார் பொருட்காட்சிகளின் வாயிலாக முதலமைச்சர் நிவாரண நிதியாக 6 கோடியே 79 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் வரப்பெற்றுள்ளது.

**புதுடெல்லி மலர்ப்பேரணி**

புதுடெல்லியில் ஆண்டுதோறும் தேசிய ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், மலர்ப்பேரணி விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை பங்கேற்றுப் பரிசுகளைத் தொடர்ந்து பெற்று வருகிறது. 2023-2024இல் மூன்றாவது பரிசைப் பெற்றது.

**குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள்**

புதுடெல்லியில், ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு தின விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத்துறை பங்கேற்று, ஒன்றிய அரசின் உயர்மட்டக் குழுவினரால் பரிந்துரைக்கப்படும் கருப்பொருளுக்கு ஏற்ப அலங்கார ஊர்திகள் வடிவமைக்கப்பட்டுத் தேர்ச்சி பெற்ற கலைஞர்களைக் கொண்டு கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு ஒன்றிய அரசினாலும், பொதுமக்களாலும் பாராட்டப்பட்டு, தமிழ்நாட்டிற்குப் பெருமையைச் சேர்த்து வருகிறது.

புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் இந்திய குடியரசு தினவிழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில், 2022 ஆம் ஆண்டு, ஜனவரி 26 அன்று நடைபெற்ற இந்திய குடியரசு தின விழாவில் விடுதலைப் போரில் தமிழகம் எனும் கருப்பொருளில் இந்திய விடுதலைக்கு அரும்பாடுபட்ட தமிழ்நாட்டுத் தலைவர்களின் பங்களிப்பினைப் பறைசான்றுகின்ற வகையில் அப்பெருமக்களின் திருவுருவச் சிலைகள் தாங்கிய அலங்கார ஊர்திக்கு இந்திய அரசின் சார்பில் பங்கேற்றிட அனுமதி மறுக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய அரசின் பிரதமர் தலையிட வற்புறுத்தியும் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், அந்த இரு அலங்கார ஊர்திகளையும் தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்கள் கண்டுகளித்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னையில் தொடங்கி வைக்கப்பட்ட அலங்கார ஊர்திகள், கன்னியாகுமரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டு இலட்சக்கணக்கான மக்கள் கண்டுகளித்ததோடு, சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பிலும் இந்த அலங்கார ஊர்திகள் பங்கேற்றுச் சிறப்பித்தன.

இந்த ஆண்டு (2024) நடைபெற்ற குடியரசு தின விழாவில் தமிழ்நாடு 'அரசின் சார்பில் "**குடவோலை முறை தேர்தலை"** முன்னிலைப்படுத்தி கலந்து கொண்ட தமிழ்நாடு அலங்கார ஊர்திக்கு மூன்றாவது பரிசும், கலைநிகழ்ச்சிக்கு முதல் பரிசும் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்னையில் நடைபெறும் குடியரசு தின விழாவில், தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் சாதனைகளைக் காட்சிப்படுத்தும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் மங்கள இசை வாசிக்கும் குழுவினருடன் செல்லும் ஓர் அலங்கார ஊர்தியும். துறையின் மற்றொரு அலங்கார ஊர்தியும் இடம் பெற்று வருகின்றன.

அரசின் பல துறைகளின் சார்பில் வடிவமைக்கப்படும் அலங்கார ஊர்திகளின் வடிவமைப்புகள் மற்றும் அணிவகுப்புகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் பணிகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

சென்னையில் நடைபெற்ற நடப்பாண்டிற்கான குடியரசு தினவிழாவில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலங்கார ஊர்தியில் மதுரையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு

ஏறு தழுவுதல் அரங்கத்தின் மாதிரி வடிவில் செய்தி மக்கள் தொடர்புத் துறை அரங்கம் வடிவமைக்கப்பட்டுப் பொதுமக்களால் பாராட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி**

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும், இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறை தொடர்ந்து பங்கேற்று, அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பொதுமக்கள் எளிதில் அறிந்திடும் வகையிலும், விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலும் தனி அரங்கு அமைத்து வருகிறது.

இந்த ஆண்டு (2024) சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற 48ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் வகையில், மதுரையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கத்தின் மாதிரி வடிவில் செய்தி மக்கள் தொடர்புத் துறை அரங்கம் வடிவமைக்கப்பட்டுப் பொதுமக்களால் பாராட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**புதுடெல்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி**

புதுடெல்லி, லால் சவுக், பிரகதி மைதானத்தில் அமைந்துள்ள இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி அரங்கில் ஆண்டுதோறும் நவம்பர் 14ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை 14 நாட்கள் நடைபெற்று வருகிறது. இப்பொருட்காட்சியில் தமிழ்நாடு அரசின் சார்பாகச் செய்தி மக்கள் தொடர்புத்துறை பிற அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து கலந்து கொள்கிறது.

இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தினால் நடத்தப்படும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் கலந்து கொள்ளும் அனைத்து மாநிலங்களுக்கும் ஒரு நாள் அந்தந்த மாநில நாளாகப் பட்டியலிடப்பட்டு அந்நாளில் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் தங்களது மாநிலத்தின் அமைச்சர்கள் மற்றும் உயர்அலுவலர்களுடன் மாநில நாளாகக் கொண்டாடி வருகின்றனர்.

தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் வாயிலாக 17.11.2023 அன்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டின் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றைப் பிற மாநில

மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கிராமியக் கலைஞர்களின் நடனங்கள் நடத்தப்பட்டு **"தமிழ்நாடு நாள் விழா"** மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் தொடர்பான சாதனைகள், திட்டப்பணிகள், கொள்கை விளக்கங்கள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் குறித்த விளக்கப் புகைப்படங்கள் மற்றும் காட்சிப் பொருள்கள் போன்றவைகள் காண்போரைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டு, அனைத்துத் தரப்பு மக்களும் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் மற்றும் சிறப்புகளை அறிந்து கொள்ளவும், பயனாளிகள் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கான வழிமுறைகளை அறியும் வகையிலும் அரங்குகள் வடிவமைக்கப்படுகின்றன. 2023ஆம் ஆண்டு தமிழ்நாடு அரங்கில் கருப்பொருளைச் சிறந்த முறையில் காட்சிப்படுத்தியமைக்காக புதுடெல்லியில் இந்திய வர்த்தக மேம்பாட்டுக் கழகத்தால் (ITPO) விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

இந்தியாவிலுள்ள ஏனைய பிற மாநிலங்கள், தமிழ்நாடு அரசின் சாதனைகள், செயல்பாடுகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் வாய்ப்பாக, அகில இந்திய அளவில் நடைபெறும் இப்பொருட்காட்சி பயன்படுகிறது. மேலும், நம் மாநில மகளிர் சுய உதவிக்

குழுக்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருள்களை காட்சிபடுத்தியும், விற்பனை செய்திட நாடு தழுவிய அளவில் வணிக வாய்ப்புகளும் இப்பொருட்காட்சியால் ஏற்படுகின்றன.

**சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி**

தமிழ்நாடு அரசின் சாதனைகளைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு, சென்னை மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டிற்கு ஒருமுறை அரசு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி நடத்திட அனைத்து மாவட்டங்களுக்கும் தலா ரூபாய் பத்தாயிரம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஓராண்டில் அரசின் அரும்பணிகள் அணிவகுப்பு குறித்து, "ஓயா உழைப்பின் ஓராண்டு" என்ற தலைப்பில் அரசுத் துறைகளை ஒருங்கிணைத்து அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்திட மாவட்டம் ஒன்றிற்கு தலா ரூ.10,00,000 (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) வீதம் 38 மாவட்டங்களுக்கு ரூ.3,80,00,000/–க்கு (ரூபாய் மூன்று கோடியே எண்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு அரசின் இரண்டாண்டு சாதனைகளை பொதுமக்களுக்கு விளக்கிடும் வகையில் புகைப்படக் கண்காட்சி 6.5.2023 அன்று முதல் 14.5.2023 வரை சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் புகைப்படக் கண்காட்சியினைப் பார்வையிட்டனர். மேலும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர். மேற்படி புகைப்படக் கண்காட்சி நடத்தியதற்கான விழாச் செலவினமாக ரூ.32,94,239/-க்கு (ரூபாய் முப்பத்து இரண்டு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து இருநூற்று முப்பத்து ஒன்பது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2023-2024ஆம் நிதியாண்டில் 38 மாவட்டங்களில் அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை நடத்துவதற்கு ஏதுவாக மாவட்டம் ஒன்றிற்கு தலா ரூ.3,00,000/- வீதம் 38 மாவட்டங்களுக்கு ரூ.1,14,00,000/-க்கு (ரூபாய் ஒரு கோடியே பதினான்கு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளித்து செய்து ஆணை வெளியிடப்பட்டது.

# மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், செயலாக்கங்கள், சாதனைகள் மற்றும் புதிய அறிவிப்புகளைப் பயனாளிகளான பொது மக்களுக்கும், மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் மாவட்ட நாளிதழ்கள், தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்கள் வழியாக விளம்பரப்படுத்தும் கள விளம்பரப் பணிகளைத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களும் செயல்படுத்துகின்றன.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி), உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) மற்றும் தேவையான பணியாளர்கள் கட்டமைப்புடன் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் செயல்படுகின்றன. தொடர்ந்து, சாதனைகள், புதிய அறிவிப்புகள் ஆகியவற்றை உடனுக்குடன் மக்களுக்குக் கொண்டுசெல்லும் பணியைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றன.

மேலும், அரசின் திட்டங்கள் அனைத்தையும், அனைத்துத் தரப்பு மக்களிடமும் எடுத்துச் சென்றிடும் வகையில், நாளிதழ்கள், ஊடகங்கள், மின்னணு விளம்பரத்திரை வாகனப் படக்காட்சிகள், புகைப்படக் கண்காட்சிகள் ஆகியவற்றின் வாயிலாக, களவிளம்பரப் பணிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மாவட்டங்களில் நடைபெறும் திட்டங்கள், பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் செய்தியாளர்கள் பயணத்திற்கு ஏற்பாடு செய்தல், அரசின் திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் பேட்டிகளுடன் திட்டங்கள் குறித்த வெற்றிக்கதைகளை நாளிதழ்களில் வெளிவரச் செய்தல், மின்னணு விளம்பரப் படக்காட்சி நடத்துதல், அரசின் செய்தி மலர் திரையரங்குகளில் திரையிடப்படுவதை ஆய்வு செய்தல், புகைப்படக் கண்காட்சிகள் நடத்துதல், 'தமிழரசு' இதழைப் பொது மக்களிடம் கொண்டு சேர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மடிப்பேடுகள், துண்டு பிரசுரங்கள் வெளியிடுதல், சமூக ஊடகங்களைக் கையாளுதல் போன்ற பணிகளின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்பட்டு மாதந்தோறும் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் தரமதிப்பீடு செய்யப்பட்டு உரிய அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன.

## மாநிலச் செய்தி நிலையம், சென்னை

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ், மாநிலச் செய்தி நிலையம் சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மாநில செய்தி நிலையத்தில் அனைவரும் படித்துப் பயன்பெறும் வகையில், ஒரு நூலகம் செயல்பட்டு வருகிறது.

இந்நூலகம் அரசு விடுமுறை நாள்கள் தவிர்த்து அனைத்து வேலைநாள்களிலும் காலை 9.45 மணி முதல் மாலை 5.45 மணி வரை செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்தில் தமிழ் மற்றும் ஆங்கில இலக்கியங்கள், அறிவியல், ஆய்வுக்கட்டுரைகள், சட்டம், மருத்துவம், உளவியல், ஆன்மீகம், ஜோதிடம், உடற்பயிற்சி, யோகா, வரலாறு, அரசியல், பண்பாடு, தலைவர்களின் வாழ்க்கை வரலாறு உள்ளிட்ட நூல்கள் மற்றும் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கல்வியியல் மற்றும் அனைத்து விதமான போட்டித்தேர்வுகளுக்குத் தேவையான குறிப்புகள் அடங்கிய நூல்கள் எனப் பல்வேறு தலைப்புகளில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஏறத்தாழ 73,042 நூல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூல்களைப் பொது மக்கள், அறிஞர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள், மாணவ, மாணவியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் உள்ளிட்ட

அனைத்துத் தரப்பினரும் படித்துப் பயன்பெறும் வகையில் அமைதியான சூழ்நிலையில் இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்நூலகத்தில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களும், பருவ இதழ்களும் மற்றும் வார இதழ்களும் படித்துப் பயன்பெறுவதற்காக வைக்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை நடவடிக்கை தொடர்பான குறிப்புகள், பேரவை வெளியீடுகள், அரசுத்துறை வெளியீடுகள் ஆகியவை தொகுக்கப்பட்டு மேற்கோள் பணிக்காகச் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் தங்கள் கல்விக்குத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்தப்படும் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி, வினாடி வினா போன்ற பல்வேறு இலக்கியப் போட்டிகளில் பங்கேற்றிடத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் இந்நூலகத்திற்குப் பெருமளவில் வருகை புரிகின்றனர். மேலும், போட்டித்தேர்வுகளில் பங்குபெறும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக பல்வேறுவகைப் போட்டித் தேர்வு நூல்கள் தனித்தனியே இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இம்மாநிலச் செய்தி நிலைய நூலகத்தில் பல்வேறு பதிப்பகங்களின் வாயிலாக வெளியிடப்படும் புத்தகங்களின் இரண்டு நகல்கள் பதிவுப் பணிக்காகப் பெறப்பட்டு அந்நூல்களில் இடம்பெற்றுள்ள பதிப்புரிமை தொடர்பான தகவல்கள் மட்டும் முறையாகப் பதிவு செய்யப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இத்தகைய நூல்களை வருங்காலச் சந்ததிகள் படித்து அறிந்துகொள்ளும் வகையில் அவற்றைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசின் மின்நூலகம் அமைத்தல் எனும் திட்டத்தின்படி பொது நூலக இயக்ககத்தின் சார்பில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் மூலமாக மாநிலச் செய்தி நிலையத்தில் உள்ள நூல்களில் சுமார் 2,500 நூல்கள் தெரிவு செய்யப்பட்டு அந்த 2,500 நூல்களும் காப்புரிமைச் சட்டத்திற்கு உட்படாத வகையில் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

# தமிழரசு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அளப்பரிய முயற்சியால் 1970ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1ஆம் நாள் முதல் வெளியிடப்பட்டு வந்த 'தமிழரசு' இதழானது கடந்த 54 ஆண்டுகளாக அரசின் நலத்திட்டங்களையும், சாதனைகளையும் தொகுத்து வழங்கி தமிழ்நாடு அரசின் அச்சு ஊடகமாகத் திகழ்ந்து வருகிறது. தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் அனைத்து மக்கள் நலத்திட்டங்களையும், அரசின் கொள்கைகளையும், மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் பல்வேறு துறைகளிலும் வெளியிடப்பட்டு வந்த இதழ்களை எல்லாம் ஒருங்கிணைத்துச் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 'தமிழரசு' என்ற மாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

54 ஆண்டுகளைக் கடந்து தொடர்ந்து தமிழரசு மாத இதழானது வெளியிடப்பட்டு வருகிறது. 7.5.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் தமிழரசு இதழை அனைத்து மக்களிடமும் கொண்டு சேர்க்கும் வகையில் நவீன முறையில்

வண்ணப்படங்களுடன் அச்சிட்டு வெளியிட வேண்டும் என அளித்த அறிவுரைகளின் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பயனாக 2021இல் இருந்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை 30,000 என்பது ஒரு இலட்சமாக மூன்று மடங்கு உயர்ந்து சாதனை படைத்துள்ளது. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், 11.5.2023 அன்று ஒரு இலட்சத்து ஒன்றாவது சந்தாதாரருக்கு "தமிழரசு இதழை வழங்கிச்" சிறப்பித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அனைத்துத் தரப்பு மக்களும் படித்துப் பயனடைந்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரைகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடெங்கும் பங்கேற்றுச் சிறப்பிக்கும் அரசு விழாக்கள், ஆய்வுக் கூட்டங்கள், கள ஆய்வுப் பணிகள், முத்தான மக்கள் நலத்திட்டங்கள், செய்திக் குறிப்புகள், பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள், சட்டமன்றத்தில் 110 விதியின்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகள், அனைத்துத் துறைகளின் சார்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள், அறிவிப்புகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவான கட்டுரைகள்,

மாநிலம் முழுவதிலும் அரசு நலத்திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் நேர்காணல்கள், வெற்றிக் கதைகள், விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோர்களைப் பற்றிய சிறு குறிப்புகள், இலக்கியம். சிறுகதைகள், கவிதைகள் மற்றும் கட்டுரைகள் போன்ற பொதுவான தகவல்களை 'தமிழரசு' இதழ் வெளியிட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பதவியேற்று, தற்போது மூன்றாண்டு நிறைவடைந்துள்ள நிலையில், இதுவரை 15 சிறப்பு மலர்கள் உட்பட 41 சிறப்பு வெளியீடுகள் 'தமிழரசு' வாயிலாக வெளியிடப்பட்டுள்ளன.

## சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்பட்ட விபரங்கள்

| | |
|---|---|
| 1 | மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை (24.6.2021) |
| 2 | 'தலை நிமிரும் தமிழகம், நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்' எனும் சாதனை மலர் (ஆகஸ்டு 2021) |
| 3 | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறைவாரியான அறிவிப்புகள் (13.8.2021 முதல் 13.9.2021 வரை) |

| | |
|---|---|
| 4 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24.8.2021 முதல் 13.9.2021 வரை) |
| 5 | நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மார்பளவு சிலை திறப்பு சிறப்பு மலர் (டிசம்பர் 2021) |
| 6 | மக்களுக்குத் தேவையெனில், மக்கள் நலனை முன்னிறுத்தி, கடந்த ஆட்சியில் செயல்படுத்தப்படாத அறிவிப்புகளையும் சேர்த்து நிறைவேற்றுவோம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பதிலுரை (மார்ச் 2022) |
| 7 | நிறைவான வளர்ச்சியில் நிலையான பயணம் ஓராண்டு சாதனை மலர் (தமிழ்) (7.5.2022) |
| 8 | Sustained Journey towards all round growth One Year Achievements (English) (07.5.2022) |
| 9 | "முதலாண்டு முத்தான தொடக்கம், இரண்டாமாண்டு இணையற்ற ஆண்டாக இருக்கும்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெறுவதையொட்டி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110 இன் கீழ் ஆற்றிய உரை (7.5.2022) |
| 10 | கடைக்கோடித் தமிழரின் கனவுகளைத் தாங்கி – காலப்பேழை (மே 2022) |
| 11 | அறிஞர்கள் ஆளுமைகள் பார்வையில் திராவிட மாடல் அரசு (மே 2022) |

| | |
|---|---|
| 12 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (13.5.2021 முதல் 30.12.2021 வரை) தொகுப்பு–1 |
| 13 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (1.1.2022 முதல் 5.5.2022 வரை) தொகுப்பு–2 |
| 14 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள் (12.5.2021 முதல் 10.5.2022 வரை) தொகுப்பு–1 |
| 15 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24.8.2021 முதல் 9.5.2022 வரை) |
| 16 | இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு (மே 2022) தொகுப்பு–1 |
| 17 | இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு (மே 2022) தொகுப்பு–2 |
| 18 | இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு (மே 2022) தொகுப்பு–3 |
| 19 | தமிழ்நாடு நாள் ஜூலை 18 (ஜூலை 2022) |
| 20 | நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி (15.9.2022) |
| 21 | வ.உ.சி. 150 பிறந்த ஆண்டு சிறப்பு மலர் (18.11.2022) |
| 22 | பாரதி நினைவு நூற்றாண்டு மலர் (11.12.2022) |
| 23 | இலக்கிய மலர் 2023 (4.2.2023) |

| | |
|---|---|
| 24 | ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி–சாதனை மலர் (தமிழ்) (6.5.2023) |
| 25 | Two Years of Governance Unrivalled Excellence (English) (6.5.2023) |
| 26 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உதிர்த்த முத்துக்கள் (6.5.2023) |
| 27 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரை–தொகுப்பு–3 (11.5.2022 முதல் 28.7.2022 வரை) |
| 28 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரை– (தொகுப்பு–4) (29.7.2022 முதல் 30.9.2022 வரை) |
| 29 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரை– தொகுப்பு–5 (5.10.2022 முதல் 9.02.2023 வரை) |
| 30 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரை–தொகுப்பு–6 (18.2.2023 முதல் 27.4.2023 வரை) |
| 31 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை–(18.10.2022 முதல் 21.4.2023 வரை) |
| 32 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள்–(24.8.2021 முதல் 21.4.2023 வரை) |
| 33 | இதழாளர் கலைஞர்–(20.11.2023) |

| | |
|---|---|
| 34 | விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு (தமிழ்) (1.11.2023) |
| 35 | Tamil Nadu's Contribution to the Freedom Struggle (English) (01.11.2023) |
| 36 | வைக்கம் போராட்டம் (1924–2023) நூற்றாண்டு மலர் (தமிழ்) (28.12.2023) |
| 37 | வைக்கம் போராட்டம் (1924–2023) நூற்றாண்டு மலர் (மலையாளம்) (28.12.2023) |
| 38 | Vaikom Satyagraha (1924–2023) Centenary Souvenir (English) (28.12.2023) |
| 39 | கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் – ஜூன் 2024, தொகுதி– 1 (03.06.2024) |
| 40 | கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் – ஜூன் 2024, தொகுதி– 2 (03.06.2024) |
| 41 | கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் – ஜூன் 2024, தொகுதி– 3 (03.06.2024) |

மேற்காணும் சிறப்பு வெளியீடுகளில் குறிப்பாக,

(1) **"அறிஞர்கள் ஆளுமைகள் பார்வையில் திராவிட மாடல் அரசு"** என்ற சிறப்பு மலர்,

(2) தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களால் தமிழ்நாடு பெயர் மாற்ற சட்டமன்றத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட நாளினை "தமிழ்நாடு நாள்" என்று கொண்டாட ஆணையிடப்பட்டு, அந்நாளினைச் சிறப்பிக்கும் வகையில் **"தமிழ்நாடு நாள் ஜூலை 18"** என்ற சிறப்பு மலர்,

(3) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிந்தையில் உருவான மகத்தான திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் முக்கியத்துவத்தைத் தொகுத்து, **"நூற்றாண்டு கண்ட கல்விப்புரட்சி"** என்ற சிறப்பு மலர்,

(4) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்திய தேச விடுதலைக்காகப் பாடுபட்ட வீரத் தலைவர்களை, குறிப்பாக தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களைப் பெருமைப்படுத்துகின்ற வகையில், கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150ஆவது பிறந்த நாளினைப் போற்றும் வகையில் **"வ.உ.சி. 150 பிறந்த ஆண்டு சிறப்பு மலர்".**

(5) மகாகவி பாரதியார் அவர்களின் நூறாவது நினைவு நாளினை முன்னிட்டு **"பாரதி நினைவு நூற்றாண்டு மலர்" என்ற** சிறப்பு மலர்.

(6) 1997ஆம் ஆண்டு மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் **"இலக்கிய மலர்"** என்ற சிறப்பு மலர் முதன்முதலாக வெளியிடப்பட்டது. அதனைப் பின்பற்றும் வகையில், கால்நூற்றாண்டுக்குப் பின் இலக்கியத்தினைக் காத்து வளர்க்கும் பணியினை மேற்கொள்ளும் விதமாக, தமிழ்நாட்டின் பாரம்பரிய இலக்கியம், பண்பாடு,

கலாச்சாரம், சமூக வளர்ச்சியினை எடுத்துக்காட்டும் வகையில், நூற்றுக்கணக்கான தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், வரலாற்று அறிஞர்கள், கவிஞர்கள், ஓவியர்கள் ஆகியோர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களிடமிருந்து பெறப்பட்ட படைப்புகள் அனைத்தையும் **"இலக்கிய மலர் 2023"** என்ற சிறப்பு மலராகத் தொகுக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 4.2.2023 அன்று வெளியிடப்பட்டது.

(7) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.08.2021 அன்று சுதந்திர தின விழா உரையில் அறிவித்த அறிவிப்பிற்கிணங்க, "**இந்திய விடுதலைப் போராட்டத்திற்குத் தமிழ்நாடு அளித்த பங்களிப்பு"** குறித்த முழுமையான ஆவணம் தமிழிலும், ஆங்கிலத்திலும் தயாரிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1.11.2023 அன்று "விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு" (தமிழ் மற்றும் ஆங்கிலம்) என்ற சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. இம்மலரை முன்னாள் மேற்கு வங்க ஆளுநர் திரு. கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

(8) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு இதழியல் துறையில் அவர் ஆற்றிய சீரிய பணிகளைப் போற்றும் வகையில், கோயம்புத்தூரில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் **'இதழாளர் கலைஞர்'** என்னும் சிறப்பு மலர் 20.11.2023 அன்று வெளியிடப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.

(9) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, தந்தை பெரியார் அவர்களைப் போற்றி வணங்கும் விதமாக அவர் பங்கெடுத்து வெற்றி கண்ட வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு குறித்து சிறப்புப் கட்டுரைகள் பலவற்றைப் பல்வேறு அறிஞர்களிடமிருந்தும் பெற்றுத் தொகுத்து அதனை **'வைக்கம் போராட்டம் (1924–2023) நூற்றாண்டு மலர்'** தமிழ், மலையாளம் மற்றும் ஆங்கிலம் என மூன்று மொழிகளில் உருவாக்கப்பட்ட நூல்களை 28.12.2023 அன்று பெரியார் திடலில் நடைபெற்ற நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு கேரளா மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**மடிப்பேடுகள்**

விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ்ச் சான்றோர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய மடிப்பேடுகள் தயாரித்து அச்சடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக விநியோகிக்கப்படுகின்றன. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகள், வள்ளுவர் கோட்டம் பற்றிய குறிப்புகள், இந்தியப் பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி 2023 (India International Trade Fair 2023) மற்றும் 54ஆவது இந்திய சர்வதேசத் திரைப்பட விழா (Film Bazaar 2023 Goa) பற்றிய குறிப்புகள் அச்சிடப்பட்டுப் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**நிறைவேற்றப்பட்ட அறிவிப்புகள்**

2022–2023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, புதியதாக காகிதம் வெட்டும் இயந்திரம் (Cutting Machine), புதியதாக அதிக திறன் கொண்ட எண்மிய உற்பத்தி அச்சுப்பொறி (Digital Production Printer), புதியதாக மடிப்பு இயந்திரம் (Folding Machine) ஆகியவற்றை தமிழரசு அச்சகத்திற்கு ரூ.1,80,54,000/– (ரூபாய் ஒரு கோடியே என்பது இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் மட்டும்) மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## பத்திரிகையாளர் நலவாரியம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, 2021–2022ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில், 6.9.2021 அன்று பத்திரிகையாளர் நலவாரியம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், பத்திரிகையாளர் நலன் காக்கும் வகையில் பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டும், பல்வேறு நலத் திட்ட உதவிகளுக்கான தொகைகள் நிர்ணயிக்கப்பட்டும் அரசாணை வெளியிடப்பட்டது.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் செய்தியாளர்களின் தன்னலம் கருதாத பணிகளை அங்கீகரிக்கும் வகையில் அவர்களை முன்களப் பணியாளர்களாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**நலவாரிய நிதி**

பத்திரிகையாளர் நலவாரியத்திற்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டும் நடவடிக்கையாக பத்திரிகைகளில் அரசு விளம்பரங்களை வெளியிடும் விளம்பர முகமைகளுக்கு அரசால் வழங்கப்படும் விளம்பரக் கட்டணத்தில் ஒரு சதவிகிதத் தொகையை நலவாரியத்திற்கென வழங்கிட அரசு உத்தரவிட்டு, வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

**பத்திரிகையாளர் நலவாரிய குழுக் கூட்ட விவரம்**

பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்து ஆலோசிக்க ஏதுவாகப் பத்திரிகையாளர்கள் நலவாரியக் குழுக் கூட்டம் ஆறு முறை நடத்தப்பட்டுள்ளது.

**உறுப்பினர்கள் சேர்க்கை விவரம்**

பத்திரிகையாளர் நலவாரியத்தில், உறுப்பினர்களாக இணைவதற்காகத் தலைமையிடத்தில் செய்தி வெளியீட்டுப் பிரிவு, மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு, பூர்த்தி செய்து பெறப்பட்ட விண்ணப்பங்களை பத்திரிகையாளர் நலவாரியத்தில் சரிபார்க்கப்பட்டு தற்போது 3,270 பேர் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

**பத்திரிகையாளர்கள் குடும்பத்திற்கான நலத்திட்ட உதவிகள்**

**கல்வி உதவித்தொகை – இரு குழந்தைகளுக்கு மட்டும்**

- 10ஆம் வகுப்புப் படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,000/–
- 10ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு ரூ.1,000/–
- 11ஆம் வகுப்புப் படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,000/–
- 12ஆம் வகுப்புப் படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,500/–
- 12ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு ரூ.1,500/–
- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று முறையான பட்டப்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.1,500/–
- விடுதியில் தங்கிக் கல்லூரிக்குச் சென்று முறையான பட்டப்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.1,750/–
- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று முறையான பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.2,000/–

- விடுதியில் தங்கிக் கல்லூரிக்குச் சென்று முறையான பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.3,000/–
- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று முறையான தொழில்நுட்பப் பட்டப் படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.2,000/–
- விடுதியில் தங்கிக் கல்லூரிக்குச் சென்று முறையான தொழில்நுட்பப் பட்டப் படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.4,000/–
- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று முறையான தொழில்நுட்பப் பட்டமேற்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.4,000/–
- விடுதியில் தங்கிக் கல்லூரிக்குச் சென்று முறையான தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.6000/–
- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று ஐ.டி.ஐ (அ) பாலிடெக்னிக் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.1,000/–

- விடுதியிலிருந்து கல்லூரிக்குச் சென்று ஐ.டி.ஐ (அ) பாலிடெக்னிக் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.1,200/–
- திருமண உதவித் தொகை ரூ.3,000/–
- மகப்பேறு உதவித் தொகை ரூ.6,000/–
- கருக்கலைப்பு/கருச்சிதைவு உதவித்தொகை ரூ.3,000/–
- கண் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் (உறுப்பினர்களுக்கு மட்டும்) ரூ.500/–
- இயற்கை மரணத்திற்கு உதவித்தொகை ரூ.50,000/–
- ஈமச்சடங்கு உதவித்தொகை ரூ.5,000/–

**நலத்திட்ட உதவிகள் விவரம்**

பத்திரிகையாளர் நலவாரியத்திற்கு வரப்பெறும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, பயனாளிகளைத் தேர்வுசெய்து, நலத்திட்ட உதவிகள் வழங்கிட ஏதுவாக, துறையின் அமைச்சரைத் தலைவராகக் கொண்டு, 7 அலுவல்சார் உறுப்பினர்களையும், 6 அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்ட பத்திரிகையாளர் நலவாரியக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் நலவாரியத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் விண்ணப்பங்கள் அக்டோபர் 2023–ல் வெளியிடப்பட்டு, உறுப்பினர் பதிவு செய்யவதற்கான விண்ணப்பம் ஆகியவை www.dipr.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

2023–2024ஆம் ஆண்டில் பத்திரிகையாளர் நலவாரியத்தில் 11 உறுப்பினர்களுக்கு ரூ.72,250/– மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

# பத்திரிகையாளர் நலன்

## பத்திரிகையாளர் ஓய்வூதியம்

அனைத்துத் தரப்புச் செய்திகளையும் பொதுமக்களுக்குக் கொண்டு சென்று தமிழ்நாட்டினை விழிப்புணர்வு பெற்ற மாநிலமாக உருவாக்கிடவும், மழை, வெள்ளம் உள்ளிட்ட இயற்கை பேரிடர் காலங்களிலும் இரவு பகல் பாராமல் அயராது பணியாற்றிவரும் பத்திரிகையாளர்கள், ஓய்வுபெற்ற பின்னர் எந்தவித இன்னல்களுக்கும் ஆளாகாமல் இருக்க, அரசு சார்பில் மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. பத்திரிகையாளர் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.10,000/-மாக வழங்கப்பட்டு வந்தது 14.6.2023 முதல் ரூ.12,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது.

பத்திரிகையாளர் மாதாந்திர ஓய்வூதியம், 2021–2022இல் 14 பத்திரிகையாளர்களுக்கும், 2022–2023இல் 50 பத்திரிகையாளர்களுக்கும் 2023–2024இல் 12 பத்திரிகையாளர்களுக்கும் வழங்கப்பட்டது. இதுவரை மொத்தம் 308 பத்திரிகையாளர்களுக்குப் பத்திரிகையாளர் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

**குடும்ப ஓய்வூதியம்**

ஓய்வூதியம் பெற்றுவரும் பத்திரிகையாளர்கள் மறைவுக்குப் பின்னர், அவர்களின் குடும்ப நலனைக் கருத்தில்கொண்டு பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.5,000/– வழங்கப்பட்டு வந்தது 21.06.2023 முதல் ரூ.6,000/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது.

2021–2022 நிதியாண்டில், பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்குப் பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் 2 பேருக்கும், 2022–2023 நிதியாண்டில் 14 பேர்களுக்கும், 2023–2024 நிதியாண்டில் ஒருவருக்கு வழங்கப்பட்டது. இதுவரை மொத்தம் 62 பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

**குடும்ப உதவி நிதி**

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், புகைப்படக்காரர், செய்தியாளர், பிழை திருத்துநர் ஆகியோர் பணிக்காலத்தில் இயற்கை எய்திட நேரிட்டால், அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி 5 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு ரூ.1,25,000/– மாகவும், 10 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு ரூ.2,50,000/– மாகவும், 15 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு ரூ.3,75,000/– மாகவும், 20 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு ரூ.5,00,000/– மாகவும் 10.11.2021 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது.

2021–2022 நிதியாண்டில் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி ஒருவருக்கும், 2022–2023 நிதியாண்டில் 21 பேர்களுக்கும் 2023–2024 நிதியாண்டில் 16 பேர்களுக்கும், நடப்பு நிதியாண்டில் இதுநாள் வரை 7 பேருக்கும் ஆக மொத்தம் 104 பேர்களுக்கும் பத்திரிகையாளர்கள் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது.

**நலநிதியம்**

பத்திரிகையாளர்கள் பணிக்காலத்தில் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் நேரத்தில், அவர்களுக்கு மருத்துவ நிதியுதவி வழங்கப்படுகிறது. இதற்காக பத்திரிகையாளர் நலநிதி ஒரு கோடி ரூபாய் நிரந்தர நிதியாக தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டு, கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதியுதவி ரூ.2,00,000/– வழங்கப்பட்டு வந்தது 19.7.2022 முதல் ரூ.2,50,000/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது.

2023–2024 நிதியாண்டில் பத்திரிகையாளர் நல நிதிய உதவித்தொகை 6 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 8 பேருக்கு பத்திரிகையாளர் நல நிதிய உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**சிறப்பு நிகழ்வாக நிவாரண உதவிகள்**

பத்திரிகையாளர்களின் நலன் காக்கும் வகையில் அவ்வப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க சிறப்பு நிகழ்வாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவித் தொகைகள் பல்வேறு நிகழ்வுகளில் வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் 6 பத்திரிகையாளர்களுக்கு ரூ.27,00,000/- நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**கொரோனா இழப்பீட்டுத் தொகை (ம) ஊக்கத் தொகை**

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் உயிரிழந்த அங்கீகரிக்கப்பட்ட ஊடகப் பிரிவினரின் வாரிசுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை ரூபாய் ஐந்து இலட்சமாக வழங்கப்பட்டு வந்த நிலையில், 31.5.2021 முதல் ரூபாய் பத்து இலட்சமாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டு, இதுவரை மொத்தம் 26 செய்தியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூபாய் பத்து இலட்சம் / ஐந்து இலட்சம் என மொத்தம் ரூ.2,40,00,000/- இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் கொரோனா சிறப்பு ஊக்கத் தொகையாக 5,782 பத்திரிகையாளர்களுக்கு மொத்தம் ரூ.2,89,10,000/- வழங்கப்பட்டுள்ளது.

**அரசு வாடகைக் குடியிருப்பு**

பத்திரிகைத் துறையில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டில், சென்னையிலும், பிற மாவட்டங்களிலும் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளில் பத்திரிகையாளர்களுக்குக் குறைந்த வாடகையில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

**வீட்டுமனை வசதி**

மாவட்டங்களில் பத்திரிகை, தொலைக்காட்சியில் பணியாற்றும் சொந்த வீடு – வீட்டுமனை இல்லாத செய்தியாளர்களுக்கு, மாவட்ட ஆட்சியரின் அனுமதியின் பேரில் சலுகை விலையில், விதிமுறைகளுக்குட்பட்டு ஆட்சேபனையற்ற இனங்களில், வருவாய்ப் பேரிடர் மேலாண்மைத் துறை மூலம் வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன.

**செய்தியாளர் அங்கீகார அட்டை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் அரசு விழாக்கள், மிக முக்கிய பிரமுகர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளுக்குச் சென்று செய்தி சேகரித்திட ஏதுவாக, நாளிதழ்களில் பணிபுரியும் செய்தியாளர்கள்,

புகைப்படக்காரர்கள், தொலைக்காட்சிகளில் பணிபுரியும் செய்தியாளர்கள், ஒளிப்பதிவாளர்களுக்கு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக அங்கீகார அட்டைகள் சென்னை மாநகரிலும் பிற மாவட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் சென்னையில் 785 பத்திரிகையாளர்களுக்கும், பிற மாவட்டங்களில் 934 பத்திரிகையாளர்களுக்கும் ஆக மொத்தம் 1,719 பத்திரிகையாளர்களுக்கு அங்கீகார அட்டைகள் புதிதாகவும், புதுப்பித்தும் வழங்கப்பட்டுள்ளன.

**செய்தியாளர் அட்டை**

செய்தியாளர்கள் முக்கிய இடங்களுக்குச் சென்று செய்தி சேகரித்து வெளியிட ஏதுவாக, காலமுறை இதழ் செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டைகள், செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 436 செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**செய்தியாளர்களுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டை**

நடப்பாண்டில், பத்திரிகையாளர் அங்கீகார அட்டை பெற்றுள்ள பத்திரிகையாளர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் தலைமையிடப் பத்திரிகையாளர்கள் பயணம் செய்திட 457 எண்ணிக்கையிலும், பிறமாவட்டங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில், 2,917 எண்ணிக்கையிலும் ஆக மொத்தம் 3,374 கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**பத்திரிகையாளர் அறை**

தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்கள் செய்தி சேகரித்து அதனை உடனுக்குடன் பொது மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள செய்தியாளர்களுக்கு அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய செய்தியாளர்கள் அறை சிறப்பான முறையில் பயன்பாட்டில் உள்ளது.

## கலைஞர் எழுதுகோல் விருது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க, இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றி வரும் ஒரு சிறந்த இதழியலாளருக்கு ஆண்டுதோறும் ஐந்து லட்சம் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழுடன் கூடிய **"கலைஞர் எழுதுகோல் விருது"** வழங்கிட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்விருதானது ஒவ்வோர் ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த திருநாளான ஜூன் திங்கள் 3ஆம் நாளன்று வழங்கப்பட்டு வருகிறது.

கலைஞர் எழுதுகோல் விருதிற்கான தகுதியான விருதாளரைத் தேர்வு செய்திட குழு ஒன்று அமைத்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் தகுதியான விருதாளரைத் தேர்வு செய்வதற்காக நாளிதழ்களில் செய்தி வெளியிட்டு, விண்ணப்பங்கள் கோரப்பட்டு, தேர்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசுக்குத் தகுதியான விருதாளர் பரிந்துரைக்கப்படுகிறார்.

அவ்வகையில் 2021 ஆம் ஆண்டிற்கான விருது, மூத்த பத்திரிகையாளர் திரு. ஐ. சண்முகநாதன் அவர்களுக்கும், 2022ஆம் ஆண்டிற்கான விருது, மூத்த பத்திரிகையாளர் திரு. வி.என்.சாமி அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கிப் பாராட்டப்பட்டது. 2023ஆம் ஆண்டிற்கான விருதாளரைத் தேர்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**நிறைவேற்றப்பட்ட அறிவிப்புகள்**

2022–2023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தில் 30.7.2018 அன்று நிர்ணயிக்கப்பட்ட பணிக்கொடை மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாக 18.7.2022 முதல் உயர்த்தி ஆணையிடப்பட்டது.

2022–2023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, பத்திரிகையாளர் நலநிதியத்திலிருந்து 28.4.2020 முதல் வழங்கப்பட்டு வரும் மருத்துவ உதவித் தொகை ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் 2 இலட்சத்து 50 ஆயிரமாக 18.7.2022 முதல் உயர்த்தி ஆணையிடப்பட்டது.

# திரைப்படத்துறையினர் நலவாரியம்

அகில இந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் மாநாட்டில் 9.10.2009 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொழிலாளர்கள் சமுதாயத்தின் நலன்களை உறுதிப்படுத்தும் வகையில் அரசின் பல்வேறு துறைகளின் கீழ் பல அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் உருவாக்கப்பட்டு அந்த வாரியங்களின் மூலம் தொழிலாளர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில், தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும், அதன் வாழ்விலும் பல்வேறு நிலையில் தங்கள் உழைப்பை நல்கிவரும் கலையுலகத்தினரின் நலன்களுக்காகத் தனி நலவாரியம் அமைக்கப்பட வேண்டுமெனத் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பிலும், தமிழ்த் திரையுலகின் சார்பிலும் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கையினை ஏற்றுத் தமிழ்நாடு அரசு சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத்துறையினர் நலவாரியம் ஒன்றினைப் புதிதாக உருவாக்கும்" என்று அறிவித்தார்கள். அதற்கிணங்க 28.10.2009 அன்று திரைப்படத் துறையினர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டது.

திரைப்படத் துறையினர் நலவாரியக் குழுவில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்கள் உறுப்பினர்–செயலராகவும் உள்ளனர்.

**அலுவல் சார்ந்த/அலுவல் சாரா உறுப்பினர்கள்**

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர், நிதித்துறை செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலாளர், தொழிலாளர்கள் நலன் துறை மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலாளர், வணிகவரித்துறை ஆணையர், உள் (சினிமா), மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை துணைச் செயலாளர், தொழிலாளர் நலத்துறை ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர் ஆகிய எட்டு அரசு உயர் அலுவலர்கள் அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் ஆவர். மேலும், திரைப்படத் துறையில் வல்லுநர்களாக உள்ள 11 பேர் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நலவாரியத்தில் 39 சங்கங்களைச் சார்ந்த திரைப்பட மற்றும் சின்னத்திரை தொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இந்நலவாரியத்தில் தற்போது 27,091 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

திரைப்படத் துறையினர் நலவாரியத்தில் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைவு உதவித் தொகை, மூக்குக் கண்ணாடி உதவித் தொகை, விபத்து ஈட்டுறுதித் திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை, ஈமச்சடங்கு உதவித் தொகை போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரையின் படைப்பாக்கத்தில் பங்கேற்றுப் பணியாற்றும் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு :

## நலத்திட்ட விவரங்கள்

### அ. கல்வி உதவித் தொகை

- 10 ஆம் வகுப்புப் படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு – ரூ.1,000/–
- 10 ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்க்கு (இரு பாலருக்கும்)– ரூ.1,000/–
- 12–ஆம் வகுப்புப் படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு – ரூ.1,500/–
- 12–ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்க்கு (இரு பாலருக்கும்) –ரூ.1,500/–
- முறையான பட்டப்படிப்புப் பயிலும் மாணவர்களுக்கு (இரு பாலருக்கும்) ரூ.1,500/–
- மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) ரூ.1,750/–
- முறையான பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) ரூ.2,000/–
- விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும் ) ரூ.3,000/–
- தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) ரூ.2,000/–
- விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) ரூ.4,000/–
- தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு (இரு பாலருக்கும்) ரூ.4,000/–

- விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) ரூ.6,000/–
- ஐ.டி.ஐ. தொழில் பயிற்சி அல்லது பல வகைத் தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) ரூ.1,000/–
- விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது பலவகைத் தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) ரூ.1,200/–

ஆ. திருமண உதவித் தொகை – ரூ.2,000/–

இ. மகப்பேறு உதவித் தொகை – ரூ.6,000/–

ஈ. கருக்கலைப்பு / கருச்சிதைவு உதவித்தொகை – ரூ.3,000/–

ஊ. மூக்குக் கண்ணாடிச் செலவுத் தொகையை ஈடுசெய்தல்– ரூ.500/–

**விபத்து ஈட்டுறுதித் திட்டம்**

- விபத்தினால் ஏற்படும் மரணம் ரூ.1,00,000/–
- விபத்தினால் ஏற்படும் ஊனம் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.10,000/– முதல் ரூ.1,00,000/– வரை
- இயற்கை மரணம் உதவித்தொகை ரூ.15,000/–
- ஈமச் சடங்கு உதவித்தொகை ரூ.2,000/–

திரைப்படத் துறையினர் நலவாரியத்தில் 2009ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை 2,970 பயனாளிகளுக்கு ரூ.1,03,34,750/– (ரூபாய் ஒரு கோடியே மூன்று இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) நலத்திட்ட உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

1.1.2023 முதல் 31.12.2023 வரை 155 உறுப்பினர்களிடமிருந்து ரூ.8,15,000/- (ரூபாய் எட்டு இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்)க்கான நலத்திட்ட உதவிகள் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதனை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரைப்படத்துறையினர் நலவாரியத்தின் நிதி ஆதாரத்தினை அதிகரிக்க படப்பிடிப்புக் கட்டணத்திலிருந்து 50 சதவிகிதம் திரைப்படத் துறையினர் நலவாரியத்திற்கு வழங்க அரசாணை வெளியிடப்பட்டு, அரசுக் கணக்கில் தொகை வரவு வைக்கப்பட்டு வருகிறது.

# திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள்

## திரைப்பட விருதுகள்

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின் திரைப்பட விருது வழங்கும் திட்டத்தை உருவாக்கினார்கள். அத்திட்டத்தின்படி, தமிழ்நாடு அரசால் 1968ஆம் ஆண்டு முதல் சமுதாயச் சிந்தனைகளுடன், மனித நல்லுணர்வுகளைப் பிரதிபலிக்கும் தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தயாரித்திட ஊக்கப்படுத்தும் விதமாகச் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்து விருதுகளை வழங்குவதற்குத் தமிழ்நாடு அரசால் தேர்வுக்குழு அமைக்கப்பட்டு, இத்தேர்வுக்குழு தேர்ந்தெடுத்துப் பரிந்துரைக்கும் சிறந்த திரைப்படங்களுக்கு முதல்

பரிசாக ரூபாய் 2 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூபாய் 1 இலட்சம், மூன்றாம் பரிசாக ரூபாய் 75 ஆயிரம், சிறப்புப் பரிசாக ரூபாய் 75 ஆயிரம், ரொக்கமாக வழங்கப்படுவதோடு, நினைவுப்பரிசுகள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், மகளிரைப் பற்றி உயர்வாகச் சித்திரிக்கும் திரைப்படத்திற்குச் சிறப்புப் பரிசாக ரூபாய் 1 இலட்சத்து 25 ஆயிரம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த நடிகர் (சிறப்புப்பரிசு), சிறந்த நடிகை (சிறப்புப்பரிசு), சிறந்த வில்லன் நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகை, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த இயக்குநர், சிறந்த கதை ஆசிரியர், சிறந்த உரையாடலாசிரியர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடலாசிரியர், சிறந்த பின்னணிப் பாடகர், சிறந்த பின்னணிப் பாடகி, சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த திரைப்படத் தொகுப்பாளர், சிறந்த கலை இயக்குனர், சிறந்த சண்டைப்பயிற்சியாளர், சிறந்த நடன ஆசிரியர், சிறந்த ஒப்பனைக் கலைஞர், சிறந்த தையற்கலைஞர், சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணிக்குரல்

கொடுப்பவர் (ஆண்) மற்றும் சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (பெண்) ஆகியோருக்குத் தலா ஐந்து பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

2009ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை திரைப்பட விருதுகள் வழங்கப்படாமல் இருந்தன. அந்த விருதுகளை வழங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதைத் தொடர்ந்து 4.9.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் 183 விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோர் வழங்கிச் சிறப்பித்தனர்.

2015ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழா சென்னை அடையாறு முத்தமிழ்ப் பேரவையில் 6.3.2024 அன்று நடைபெற்றது. அவ்விழாவில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

ஆகியோர் சிறந்த திரைப்படங்களின் தயாரிப்பாளர்கள் 5 பேருக்குக் காசோலைகளையும், 29 பேருக்குத் தலா 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தனர்.

2016ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் பொருட்டு மாண்புமிகு ஓய்வு பெற்ற நீதியரசர் கே.பி.கே.வாசுகி அவர்களை தலைவராகக் கொண்டு தேர்வுக்குழு அமைக்கப்பட்டு விருதாளர்களைத் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது**

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளர் ஒருவருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது" வழங்கப்படுகிறது.

கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது ஒவ்வொரு ஆண்டும் அவரது பிறந்த நாளான ஜூன் 3ஆம் நாள் அன்று வழங்கப்படுகிறது. விருதுக்குத் தேர்வு செய்யப்படும் விருதாளருக்கு ரூபாய் 10 இலட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

2022ஆம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட திரு.ஆரூர்தாஸ் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3.6.2022 அன்று அவர்களின் இல்லத்திற்கே நேரில் சென்று ரூபாய் பத்து இலட்சத்திற்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பெண்மையைப் போற்றுகின்ற வகையில் சிறப்பினமாக 2023ஆம் ஆண்டிற்கு மட்டும் கூடுதலாக ஒரு பெண் திரைக்கலைஞருக்கென கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது வழங்கப்படவுள்ளது. அவ்வகையில் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு விண்ணப்பங்கள் பெற முன்னணி நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடபட்டு கலைத் துறையினரிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவ்விண்ணப்பங்களை இதற்கென அமைக்கப்பட்ட தேர்வுக்குழு பரிசீலனை செய்து அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

**கலைத்துறை வித்தகர் விருதுகள்**

கலைத்துறையில் எழுத்து, நடிப்பு, சினிமா என பல்துறைகளிலும் தனித்துவம் படைத்த பேரறிஞர் அண்ணா, மக்களைச் சிரிப்பின் மூலம் சிந்திக்க வைத்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், மக்கள் மனம் கவர்ந்த ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர், உழைப்பால் உயர்ந்த பன்முக நடிகர் ராஜாசாண்டோ, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், நடிப்பிற்கே இலக்கணமாகத் திகழ்ந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன், காலத்தால் அழியாத பாடல்கள் படைத்த கவியரசு கண்ணதாசன், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா ஆகியோரின் பெயர்களில் 'கலைத்துறை வித்தகர் விருதுகள்' தமிழ்நாடு அரசினால் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்விருதுகளைப் பெறுகின்ற கலைத்துறை வித்தகர்களுக்கு, தலா 5 பவுன் தங்கப்பதக்கமும், நினைவுப்பரிசும் வழங்கப்படுகின்றன.

**அரசு திரைப்பட மானியம்**

சிறிய முதலீட்டில் திரைப்படம் தயாரிப்பவர்களை ஊக்குவிக்கும் வகையில், குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தமிழ்த் திரைப்படங்களுக்கு

அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை, தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் வாயிலாக, குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்ப் திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு திரைப்படத்திற்கும் இத்திட்டத்தின் வாயிலாக ரூபாய் ஏழு இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

2015ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டுகளுக்கான அரசு திரைப்பட மானியம் வழங்கும் பொருட்டு மாண்புமிகு ஓய்வு பெற்ற நீதியரசர் எஸ்.கே.கிருஷ்ணன் அவர்களைத் தலைவராகக் கொண்டு தேர்வுக்குழு அமைக்கப்பட்டு அரசு மானியம் வழங்குவதற்குரிய திரைப்படங்களை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**சின்னத்திரை விருதுகள்**

தமிழ்நாடு அரசின் சார்பில் மக்களின் தினசரி வாழ்க்கையில் மிகப்பெரும் பங்கு வகித்து வரும் சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்கள் அவற்றில், பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், தமிழ்நாடு அரசின் சார்பில், சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசாக ரூபாய் இரண்டு இலட்சம், இரண்டாம் பரிசாக ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கத்துடன் நினைவுப் பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமின்றிச் சிறந்த கதாசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்) சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) மற்றும் சிறந்த தந்திரக் காட்சியாளர் எனச் சின்னத்திரையில் சிறந்து விளங்குவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தலா மூன்று பவுன் தங்கப் பதக்கமும், நினைவுப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

மேலும், ஆண்டின் சிறந்த சாதனையாளர் மற்றும் சிறந்த வாழ்நாள் சாதனையாளராகத் தேர்வு செய்யப்படுவோருக்குத் தலா ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கமும், நினைவுப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை வழங்கப்படாமல் இருந்த சின்னத்திரை விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி 4.9.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் 101 சின்னத்திரை விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோர் வழங்கிச் சிறப்பித்தனர்.

2014ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு சின்னத்திரை விருதுகள் வழங்கும் பொருட்டு மாண்புமிகு ஓய்வு பெற்ற நீதியரசர் ஜி.எம்.அக்பர் அலி அவர்களைத் தலைவராகக் கொண்டு தேர்வுக்குழு அமைக்கப்பட்டு விருதாளர்களைத் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு நிதியுதவி**

சென்னையில் நடைபெற்ற சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 2021ஆம் ஆண்டிற்கு ரூ.75 இலட்சமும், 2022ஆம் ஆண்டிற்கு

ரூ.75 இலட்சமும் மற்றும் 2023ஆம் ஆண்டிற்கு ரூ.85 இலட்சமும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் (NFDC) சார்பில் கோவாவில் நடைபெற்ற இந்திய சர்வதேசத் திரைப்பட விழாவிற்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் 2022ஆம் ஆண்டிற்கு ரூ.12 இலட்சமும், 2023ஆம் ஆண்டிற்கு ரூ.15 இலட்சமும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**மாணவர்கள் விருதுகள்**

2008–2009ஆம் கல்வியாண்டு முதல் 2013–2014ஆம் வரையான ஆறு ஆண்டு கல்வியாண்டுகளுக்கு வழங்கப்படாமல் இருந்த தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கான 30 விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி 4.9.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோர் வழங்கிச் சிறப்பித்தனர்.

2014–2015 ஆம் கல்வியாண்டுக்கான தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் 5 பேருக்குத் தலா 1 பவுன் தங்கப்பதக்கம், ரொக்கம் ரூபாய் ஐந்தாயிரம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் 6.3.2024 அன்று சென்னை அடையாறு முத்தமிழ்ப் பேரவையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆகியோர் திரைப்பட விருதுகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

# தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

கலை, இலக்கியங்களில் உயர்ந்த நிலையில் உள்ள தமிழ்நாட்டில் கலைகளில் ஓர் அங்கமாக திகழும் இயல், இசை, நாடகத்தின் வடிவான திரைப்படத் தயாரிப்பு, அதனுடைய தொழில்நுட்பக் கல்வி நுணுக்கங்கள் மற்றும் கலை உணர்வுகளையும் பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனமாக தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் விளங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் ஒரு நீண்ட நெடிய வரலாற்றினைக் கொண்டது. கடந்த 1945ஆம் ஆண்டு முதல் மத்திய பல்தொழில்நுட்பப் பயிற்சி மையத்தில் ஓர் அங்கமாக இருந்து, 1960ஆம் ஆண்டு ஒரு தனிப் பயிற்சி நிறுவனமாக மாற்றப்பட்டது. 9.8.2021 முதல் இத்திரைப்படக் கல்விக்கூடம்" தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்" (**Tamil Nadu Government M.G.R. Film and Television Institute**) என்று அழைக்கப்பெறலாயிற்று.

தமிழ்நாடு அரசின் செய்தித் துறை கட்டுப்பாட்டின் கீழ் 15.25 ஏக்கர் நிலப்பரப்பில் சென்னை தரமணியில் சிறப்பான முறையில் செயல்பட்டு வரும் இந்நிறுவனத்தில் பலதரப்பட்ட திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப் பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்றுத் தருவதே முக்கிய இலக்காக கொண்டு இயங்கி வருகிறது.

சென்னை தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையிலும், திரைப்பட தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் பயன்படும் வகையிலும் இந்த வளாகத்தில் ரூபாய் 39.33 கோடி மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய மூன்று படப்பிடிப்புத் தளங்கள் விரைவில் அமைப்பதற்கான திட்டமதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

இந்தியாவிலேயே ஒரு மாநில அரசால் தொடங்கப் பெற்று இயங்கி வரும் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிக்கான கல்லூரி தமிழ்நாடு அரசு

எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் மட்டுமே ஆகும். கடந்த 50 ஆண்டுகளாக இந்நிறுவனத்தில் பயிற்றுவிக்கப்பட்டு வந்த பட்டயக் கல்விகள் 2016–2017ஆம் கல்வி ஆண்டு முதல் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக அங்கீகாரத்துடன் இந்தியாவிலேயே முதன் முறையாக இளங்கலை–காட்சிக்கலை (Bachelor of Visual Arts) எனும் பட்டப்படிப்புகளாகத் தரம் உயர்த்தப்பட்டு ஆறு பிரிவுகளில் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

**பட்டப் படிப்புகளின் விவரங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | இளங்கலை காட்சிக்கலை (ஒளிப்பதிவு) | Bachelor of Visual Arts (Cinematography) |
| 2 | இளங்கலை காட்சிக்கலை (எண்மிய இடைநிலை) | Bachelor of Visual Arts (Digital Intermediate) |
| 3 | இளங்கலை காட்சிக்கலை (ஒலிப்பதிவு) | Bachelor of Visual Arts (Audiography) |
| 4 | இளங்கலை காட்சிக்கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்) | Bachelor of Visual Arts (Direction and Screenplay Writing) |
| 5 | இளங்கலை காட்சிக்கலை (படத்தொகுப்பு) | Bachelor of Visual Arts (Film Editing) |
| 6 | இளங்கலை காட்சிக்கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன்) | Bachelor of Visual Arts (Animation and Visual Effects) |

**மாணவர் சேர்க்கை**

ஒவ்வொரு கல்வியாண்டிலும், 14 மாணவர்கள் வீதம் ஆறு பாடப்பிரிவுகளுக்கும் 84 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். பட்டப் படிப்புகளுக்குரிய கல்விக் கட்டணமாக ரூ.15,000/-, சிறப்புக் கட்டணமாக ரூ.2,000/- மற்றும் வளர்ச்சிக் கட்டணமாக ரூ.1,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்களுக்கும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கும் அரசாணைகளின்படி உரிய சலுகைகள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன.

**மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களுக்கு நிதியுதவி**

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன இறுதி ஆண்டு மாணவர்களுக்கு குறும்படம் தயாரிக்க வழங்கப்பட்டு வரும் ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) நிதியுதவியைத் தமிழ்நாடு அரசு 2023-2024ஆம் ஆண்டு முதல் ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கியுள்ளது. கல்வி இறுதியாண்டில் குறும்படங்கள் தயாரிக்கப்படுவதற்கான பயிற்சி, ஆறு துறைகளிலும் பயிலும் மாணவர்களைக் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு குறும்படம் வீதம் 14 குறும்படங்கள் தயாரிக்கத் தேவையான அனைத்துப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

## குறும்பட விருதுகள்

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்படும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படப் பதனிடுபவர் ஆகியோர் ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினால் தேர்வு செய்யப்பட்டு, "மாணவர்களுக்குக்கான குறும்பட விருது" பெறும் விருதாளர்களுக்கு தலா ஒரு பவுன் தங்கப்பதக்கம், நினைவுப் பரிசு, சான்றிதழ் மற்றும் ரூ.5,000/– ரொக்கம் வழங்கப்படுகின்றன.

## திரைக்கல்வி விருது

"சென்னை சர்வதேசத் திரைப்பட விழா"வில் பங்கேற்கும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்களின் குறும்படங்களுக்கு 2022–2023ஆம் ஆண்டு முதல் "திரைக்கல்வி விருது" வழங்கப்பட்டு வருகிறது. விருது பெற்ற குறும்படங்களின் விவரங்கள்:–

| வ. எண் | கல்வி ஆண்டு | குறும்படத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | 2022–2023 | "ஊமை விழி" |
| 2. | 2023–2024 | "தி லாஸ்ட் ஹெர்ட்" |

**இந்திய சர்வதேசத் திரைப்பட விழா – கோவா**

நவம்பர் 2023 கோவாவில் நடைபெற்ற 54ஆவது சர்வதேசத் திரைப்பட விழாவில் மாணவர்களுக்கான குறும்படத் திரையீட்டில் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களின் குறும்படங்கள் திரையிடப்பட்டு, திரை வல்லுநர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. குறும்படங்கள் விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண் | குறும்படத்தின் பெயர் |
|---|---|
| 1. | அவள் (Aval) |
| 2. | தி லாஸ்ட் ஹெர்ட் (The Lost Herd) |
| 3. | ட்ரீம் பில் (Dream Pill) |
| 4. | டான் (Dawn) |
| 5. | த்ரீ பீஸ் லைட் (3 Piece Light) |

**மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தில் பயிற்சி**

தற்போதைய நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப நான்காம் ஆண்டு மாணவர்களின் குறும்படங்கள் தயாரிப்பதற்காக திரைத்துறைக்கு இணையாக நவீன தொழில்நுட்பக் கருவிகளை வாடகை அடிப்படையில் எடுத்திட தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**நிறைவேற்றப்பட்ட அறிவிப்புகள்**

2022-2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்பட பயிற்சி நிறுவனத்தில் உள்ள குளிர் சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத் தளம், நீதிமன்றக் கட்டடம், சிறைச்சாலைக் கட்டடம், மாணவர் விடுதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ரூ.5.09 கோடியில் புனரமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் கூட்டரங்கம் அமைத்தல் பயிற்சிப் பிரிவுகளில் பராமரிப்பு பணிகள் மற்றும் வர்ணம் பூசுதல், பெயர்ப் பலகை அமைத்தல் பழுமையான, பழுதடைந்த கட்டடங்கள் சீரமைத்தல், மின் கலன்கள் சீரமைத்தல் சுகாதார வசதிகள் மேம்படுத்துதல் போன்ற உட்கட்டமைப்பு பணிகளை ரூ.1.58 கோடி மதிப்பீட்டில் பணிகள் நிறைவேற்றப்பட்டது.

2022–2023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இந்நிறுவனத் தலைவர் அவர்களின் தலைமையில் திரைத்துறையின் அனுபவமிக்க வல்லுநர்களைக் கொண்டு துணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரையின்படி பாடத்திட்டங்கள் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டு 2023–2024ஆம் கல்வியாண்டு முதல் நிறைவேற்றப்பட்டது.

2022–2023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் மாணவ / மாணவியர் அதிகளவில் பயின்று வருவதால் மாணவ / மாணவியர் மற்றும் பணியாளர்கள் அமர்ந்து உணவு அருந்துவதற்காக, உணவு அருந்தும் அறை (Dining Hall) ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டது.

## திரையரங்குகள், வீடியோ மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு

திரைப்படம், அனைத்து தரப்பு பொதுமக்களும் எளிதில் அணுகக்கூடிய பிரபலமான பொழுதுபோக்குகளில் ஒன்றாகும். தமிழ்நாட்டில் திரைப்படம் முக்கியப் பங்காற்றுகிறது. 1950ஆம் ஆண்டின் முற்பகுதியில் பெரும்பாலான திரைப்படங்கள் இதிகாசம் மற்றும் புராணக் கதைகளைச் சார்ந்தே இருந்தது. பின்னர், அவை சமூக சீர்திருத்தங்கள் மற்றும் செழுமையான தமிழ் மொழியை வலியுறுத்தும் திரைப்படங்களாக மாற்றப்பட்டன. இது தமிழ்நாட்டின் கல்வியறிவு, சமூக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் போன்ற அனைத்து துறைகளின் நிலையான வளர்ச்சிக்கு வழி வகுக்கிறது. பொதுவுடைமை, மதச்சார்பின்மை, சமத்துவம், சகோதரத்துவம், சுயமரியாதை மற்றும் சமூக சீர்திருத்தங்கள் ஆகியவை வலுவாக வலியுறுத்தப்பட்டு, மக்களால் பின்பற்றப்படும் ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும். மேலும், இந்தத் தொழில் துறையின் விரிவான வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், அரசு, குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு திரையரங்குகளில்

வெளியிடப்படும் சமூக விழிப்புணர்வு மற்றும் நற்செய்திகளுடன் கூடிய தரமான தமிழ்ப் படங்களுக்கு ரூ.7,00,000/– மானியம் அளித்து வருகிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசுக்கும், வருமானம் ஈட்டித் தரும் துறையாக திரைப்படத்துறை இருந்து வருகிறது. திரைப்படத்துறை ஆயிரக்கணக்கான திரைப்பட கலைஞர்களுக்கும், தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் வேலை வாய்ப்பினை அளிக்கிறது. வணிகத்தில் திரைப்படம் முக்கிய பங்கு வகிக்கிறது, திரைப்படம் பண சுழற்சி வாயிலாக வணிக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கிய காரணியாக விளங்குகின்றது.

திரையரங்கம் என்பது அனைத்து மக்களும் ஒரே கூரையின் கீழ் அமர்ந்து திரைப்படம் பார்க்கும் இடமாகும். தமிழகத்தில் திரையரங்குகளை மேம்படுத்துவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும், தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955 இயற்றி உள்ளது. மேலும், திரையரங்குகளை ஒழுங்குபடுத்தவும் திரையரங்குகளுக்கு வரும் பார்வையாளர்களுக்கு அடிப்படை வசதிகள், பாதுகாப்பு, சௌகரியம் மற்றும் சுகாதாரமான சூழல் ஆகியவற்றை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள், 1957 ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள 1095 திரையரங்குகள் 4 வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவைகளின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | வகைபாடு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | 1017 |
| 2. | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 20 |
| 3. | நடமாடும் திரையரங்குகள் | 5 |
| 4. | திறந்தவெளி திரையரங்குகள் | 1 |
| | 2023ம் ஆண்டு புதியதாக திறக்கப்பட்ட திரையரங்குகள் | 52 |
| | **மொத்தம்** | **1095** |

தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955ன்படி, சென்னை மாவட்டம் தவிர, அனைத்து மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்கள், திரையரங்குகள் கட்டுவதற்கு தடையின்மைச் சான்று வழங்குவதற்கும், திரையரங்குகளில் திரைப்படங்களைத் திரையிடுவதற்கு "C" படிவம் உரிமம் வழங்குவதற்கும் தகுதியான அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னையைப் பொறுத்தவரை, காவல் ஆணையர் தடையின்மைச் சான்று வழங்குவதற்கும், "C" படிவ உரிமம் வழங்குவதற்கும், அதிகாரம் பெற்ற அலுவலர் ஆவார். இச்சட்டத்தின்படி, இணை ஆணையர், வருவாய்

நிருவாகம் மற்றும் அரசு (உள்துறை) ஆகியோர் முறையே மேல்முறையீட்டு மற்றும் சீராய்வு அலுவலர்களாவர். மேலும், திரைப்படம் காணவரும் பொதுமக்களின் நலனைக் காக்கும் வகையில், தமிழகத்தில் உள்ள திரையரங்குகளுக்கு நுழைவுக் கட்டணத்தை அரசு கீழ்க்கண்டவாறு திருத்தி அமைத்துள்ளது:–

| வகை | குளிர்ச்சாதன வசதி கொண்ட திரையரங்கு | | குளிர்ச்சாதன வசதியில்லாத திரையரங்கு | |
|---|---|---|---|---|
| | அதிகப் பட்சம் | குறைந்த பட்சம் | அதிகப் பட்சம் | குறைந்த பட்சம் |
| மல்டிப்ளக்ஸ் | ரூ.150/– | ரூ.50/– | – | – |
| மாநகராட்சிகள் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் | ரூ.100/– | ரூ.40/– | ரூ.80/– | ரூ.30/– |
| கிராம பஞ்சாயத்துக்கள் | ரூ.75/– | ரூ.25/– | ரூ.50/– | ரூ.20/– |

பண்டிகை போன்ற நிகழ்வுகளில், சிறப்பு காட்சிகளுக்கு அரசு கவனத்துடன் பரிசீலித்தபின், சிறப்பு காட்சிகளை தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து திரையரங்கங்களிலும், திரையிட அனுமதி அளிக்கிறது. அமைதியை சீர்குலைக்கும் திரைப்படங்கள், அதிகாரம் பெற்ற அலுவலர்களால்

தடை செய்யப்படுகிறது. இந்தச் சட்டம் அல்லது விதிகளை மீறும் திரையரங்க உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் மீது அபராதம் விதிக்கப்படுகிறது.

2023ஆம் ஆண்டில், நவீன டிஜிட்டல் தொழில்நுட்பம், மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் திரைப்படத் துறையில் வேலைவாய்ப்பு வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள், 1957இல், கீழ்க்கண்ட முக்கியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது :—

- நவீன டிஜிட்டல் சினிமாவை இயக்குவதற்கு தேவையான திறனை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள **"திரைப்பட கருவி இயக்குபவர்"** (Cinema Operator) என்ற பெயரினை **"இலக்குமுறை திரையிடும் தொழில்நுட்பாளர்"** (Digital Projection Technician) என மாற்றப்பட்டது.

- வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையானது, புதிய வேலை வாய்ப்புகளை ஊக்குவிக்கும் வகையில், "**இலக்குமுறை திரையிடும் தொழில்நுட்பாளர்**களுக்கு" சிறப்பு குறுகிய கால திறன் பயிற்சி திட்டங்களை வழங்கும்.

2023ஆம் ஆண்டில், தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள், 1957இல், திரையரங்க கட்டிடங்களுக்கான "சி" படிவ உரிமம் புதுப்பித்தலின், செல்லுபடியாகும் காலத்தினை அரசு கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்துள்ளது:–

- 0 முதல் 35 ஆண்டுகள் வரை உள்ள கட்டமைப்பைக் கொண்ட திரையரங்கு கட்டிடத்திற்கு (Building with Framed Structure), கட்டிட உறுதி தன்மைச் சான்றிதழின் (Structural Soundness Certificate) செல்லுபடியாகும் காலம் 3 ஆண்டுகள், 35 ஆண்டுகளுக்கு மேலான கட்டிடத்திற்கு, கட்டிட உறுதி தன்மைச் சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் 2 ஆண்டுகள்.

- 0 முதல் 20 ஆண்டுகள் வரை உள்ள சுமை தாங்கும் கட்டமைப்பைக் கொண்ட திரையரங்கு கட்டிடத்திற்கு (Building with Load Bearing), கட்டிட உறுதி தன்மைச் சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் 3 ஆண்டுகள், 20 ஆண்டுகளுக்கு மேலான கட்டிடத்திற்கு, கட்டிட உறுதி தன்மைச் சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் 2 ஆண்டுகள்.

**கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்பு**

1995ஆம் ஆண்டின், கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்பு (முறைப்படுத்துதல்) சட்டம் (மத்திய சட்டம் 7/1995), இந்தியா முழுவதும் உள்ள கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்பினை முறைப்படுத்துகிறது. 2011ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட கம்பிவடத் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டம் (எண்.21/2011)ன்படி, கம்பிவடத் தொலைக்காட்சியினை மாவட்ட மற்றும் உட்கோட்ட நீதித்துறை நடுவர்கள் மற்றும் அனைத்து மாநகர காவல்துறை ஆணையாளர்கள் ஆகியோர் இச்சட்டத்தின் 3, 4A, 5, 6, 8 மற்றும் 9 அல்லது 10 ஆகிய பிரிவுகளை மீறுவோர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி தமிழகத்தில் உள்ள மாநகரங்களில் தொடர்புடைய காவல் ஆணையாளர்களும், மாவட்டங்களை பொறுத்தளவில் மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர்கள் மேற்படி சட்டத்தை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கையை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**கேபிள் தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்களால் விதிமீறல் செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை**

| வருடம் | கேபிள் தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்களால் விதிமீறல் செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2021 | 08 |
| 2022 | 05 |
| 2023 | 02 |
| 2024 (30.04.2024) | – |
| **மொத்தம்** | **15** |

**பதிப்புரிமைச் சட்டம்**

மத்திய சட்டமான, 1957ஆம் ஆண்டைய பதிப்புரிமைச் சட்டமானது, படைப்பாளரை அவரது கலைப் படைப்புக்கான முதல் உரிமையாளர் என வரையறுக்கிறது. இச்சட்டம், பதிப்புரிமை பெற்ற உரிமையாளர்களுக்கு அவர்களுடைய கலை படைப்புகளை வானொலி மற்றும் தொலைக்காட்சியில் ஒலி – ஒளிபரப்பும் ஒவ்வொரு முறையும் உரிமைத் தொகை (Royalty) செலுத்துவதை கட்டாயமாக்குகிறது. பதிப்புரிமை பெற்ற படைப்புகளை ஆராய்ச்சி மற்றும் கல்வி தொடர்பாக உபயோகிக்கும் மாணவர்களுக்கு இச்சட்டம் விலக்கு அளிக்கிறது. 1957ஆம் ஆண்டைய

பதிப்புரிமைச் சட்டமானது, திருட்டு வீடியோ நாடாக்கள் சம்பந்தமான குற்றங்கள், திரைப்படம், இசை மற்றும் இதர வகைகளின் பதிப்புரிமை சட்ட விதிமீறல்களை கட்டுப்படுத்துவதற்கு காவல்துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்குகிறது.

**அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவு**

திருட்டு வீடியோ அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்தவும், பதிப்புரிமை சட்டம் தொடர்பான விதி மீறல்களை கண்காணிக்கவும் திருட்டு வீடியோ பிரிவு உருவாக்கப்பட்டு, ஒரு காவல் கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு காவல் துணை கண்காணிப்பாளர், 6 காவல் ஆய்வாளர்கள், 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 16 காவல் ஆளினர்களைக் கொண்டு தொடக்கத்தில் 6 பிரிவுகளாக சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உருவாக்கப்பட்டது.

நுண்ணறிவு சேகரிப்பு மற்றும் வழக்குப் பதிவு ஆகியவற்றில் ஏற்பட்ட பணிச்சுமையை கருத்தில் கொண்டு, மேலும் 6 பிரிவுகள் உருவாக்கப்பட்டன. புதியதாக உருவாக்கப்பட்ட 6 பிரிவுகள் சென்னை–II, வேலூர், புனித தோமையார் மலை, கடலூர், விருதுநகர்

மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. கடந்த அக்டோபர், 2017ஆம் ஆண்டு தமிழக அரசு உத்தரவின்படி திருட்டு வீடியோ பிரிவானது, அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு, பதிப்புரிமைச் சட்டம் (Copy Right Act), வர்த்தக முத்திரைச் சட்டம் (Trademark Act), வடிவமைப்புச் சட்டம் (Design Act), காப்புரிமைச் சட்டம் (Patent Act), பொருட்களின் புவிசார் குறியீட்டுச் சட்டம் (GIG Act), தாவர வகைகளின் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமைச்சட்டம் (Protection of Plant Varieties and Farmers Right Act), குறைகடத்தி ஒருங்கிணைந்த சுற்று வடிவமைப்புச் சட்டம் (Semi–Conductor Integrated Circuit Layout Design Act), உயிரியல் பன்முகத்தன்மை செயல் சட்டம் (Biological Diversity Act) ஆகிய வழக்குகளை விசாரிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மாநிலம் முழுவதும் உள்ள 12 பிரிவுகளுக்கும் ஒரு காவல் கண்காணிப்பாளர் தலைமையில், ஒரு காவல் துணை கண்காணிப்பாளர், 12 ஆய்வாளர்கள், 14 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 79 இதர ஆளினர்கள் என மொத்தம் 107 காவல் ஆளினர்கள் பணியாற்றுகின்றனர்.

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை ஆகியவற்றை இணைத்து, அமலாக்கப் பணியக குற்ற புலனாய்வு துறை என்ற ஒரே கூட்டுப் பிரிவை உருவாக்கவும், அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவை மறுசீரமைக்கவும் அரசால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு (IPREC), ஒரு காவல் கண்காணிப்பாளர் மேற்பார்வையில் இயங்குகிறது. இதன் தலைமையகம் சென்னை, சென்னை மாநகரம் என ஆறு பிரிவுகளை கொண்டு, ஒரு மண்டலத்திற்கு ஒரு பிரிவு என நான்கு மண்டலங்களில் வடக்கு (வேலூர்), மேற்கு (கோவை), மத்தியில் (திருச்சி), தெற்கு (மதுரை) என செயல்பட அரசு ஆணையிட்டுள்ளது.

அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவால் 2021 முதல் 2024 வரை (ஏப்ரல் வரை) பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரங்கள் பின்வருமாறு:—

| வருடம் | அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை | | | **புலன் விசாரணையில் உள்ள வழக்குகள்** | நீதிமன்ற விசாரணை வழக்குகள் | தண்டனை வழக்குகள் | வி.செ. வ./மு.வ.(கு.செ.)/ த.ப.செ.வ./ மே.ந.கை.வ./468 கு.ந.மு.ச.** | அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவில் கைப்பற்றப்பட்ட சொத்தின் மதிப்பு (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | குற்றவாளிகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை | **41(A) கு.ந.மு.ச. (காவல் அதிகாரியின் முன் ஆஜராகுதல்)** | | | | | |
| 2021 | 151 | 129 | 6 | 123 | 9 | 21 | 89 | 32 | 63,37,806 |
| 2022 | 87 | 88 | 2 | 84 + 2 த.ம.கை. * | 7 | 13 | 63 | 4 | 73,75,104 |
| 2023 | 111 | 118 | 7 | 111 | 23 | 17 | 58 | 13 | 75,23,369 |
| 2024 30.4.24 | 24 | 40 | 8 | 32 | 24 | – | – | – | 15,87,598 |
| **மொத்தம்** | **373** | **375** | **23** | **352** | **63** | **51** | **210** | **49** | **2,28,23,877** |

**குறிப்பு:**

* த.ம.கை. – தலைமறைவான கைதி

** வி.செ.வ. – விடுதலை செய்யப்பட்ட வழக்கு

மு.வ.(கு.செ.) – முடிவுற்ற வழக்கு (குற்றம் செய்யப்பட்ட நபரின் இறப்பு)

த.ப.செ.வ. – தவறுதலாக பதிவு செய்யப்பட்ட வழக்கு

மே.ந.கை.வ. – மேல் நடவடிக்கை கைவிடப்பட்ட வழக்கு

கு.ந.மு.ச. – குற்றவியல் நடைமுறைச் சட்டம்

## நிறைவுரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "அரசின் பொருளாதாரமும் தனிமனிதர்களின் பொருளாதாரமும் தன்னிறைவு பெற்றதாக மாற வேண்டும். நம்முடைய தமிழ்ச் சமூகமானது சிந்தனையால், பண்பாட்டால், நாகரிகத்தால், பழக்க வழக்கங்களால் உயர்வடைய வேண்டும். அதாவது, ஏற்றத்தாழ்வற்ற, உயர்வு தாழ்வற்ற ஒரு மனித உரிமைச் சமூகமாக நாம் மாற வேண்டும்." என்று கூறியுள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளதற்கு ஏற்ப, செய்தி மற்றும் விளம்பரத் துறையின் பல்வேறு பிரிவுகளான செய்தி வெளியீட்டுப் பிரிவு, புகைப்படப் பிரிவு, மேற்கோள் பிரிவு, சமூக ஊடகப் பிரிவு, விழாக்கள் பிரிவு, களவிளம்பரப் பிரிவு, விளம்பரப் பிரிவு, நினைவகங்கள் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, பத்திரிகையாளர் நல வாரியம், திரைப்படத் துறையினர் நல வாரியம், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், மாநிலச் செய்தி நிலையம், 'தமிழரசு' மாத இதழ் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் எனப் பல்வேறு பிரிவுகளின் மூலம்

தமிழ்நாடு அரசின் திட்டங்களையும் அவை நிகழ்த்திவரும் சாதனைகளையும் மக்களிடம் கொண்டுசேர்த்து ஒரு மனித உரிமைச் சமூகமாகத் தமிழ்ச் சமூகத்தை முன்னேற்றுவதில் தமிழ்நாடு அரசுக்குச் செய்தி மற்றும் விளம்பரத் துறை பெரிதும் துணை புரிந்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "**மக்களிடம் செல்! அவர்களோடு வாழ்! அவர்களை நேசி! அவர்களிடமிருந்து கற்றுக் கொள்! அவர்களுக்குத் தெரிந்ததிலிருந்து தொடங்கு! அவர்களிடம் இருப்பதிலிருந்து கட்டுமானம் செய்! பணி முடிந்த பிறகு அவர்களுக்குத் திருப்தியை ஏற்படுத்தி விட்டுத் திரும்பி வா!**" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய மணிமொழிகளை அடிக்கடி சுட்டிக்காட்டுவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காட்டும் வழியில் செய்தி மற்றும் விளம்பரத் துறை தமிழ்நாடு அரசுக்கும் மக்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவுவதில் என்றும் தொடர்ந்து உறுதியுடன் செயலாற்றும்.

**மு.பெ.சாமிநாதன்**
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்

## இணைப்பு–1

**வரவு செலவுத் திட்ட மதிப்பீடு** 2024 –25 **தொகை (ரூபாய் ஆயிரத்தில்)**

| | | 2022–23 கணக்குகள் | 2023–24 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2023–24 திருத்த மதிப்பீடு | 2024–25 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப்பணிகள் | 1,63,68 | 2,40,00 | 3,49,38 | 2,43,50 |
| 2205 | கலையும் பண்பாடும் | **9,62** | 11,08 | 12,11 | 11,83 |
| **2220** | செய்தி மற்றும் விளம்பரம் | 134,48,91 | 139,00,96 | 153,63,96 | 142,93,10 |
| **2230** | தொழிலாளர் வேலை வாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு | **48,39** | 45,00 | 53,08 | 45,00 |
| **2235** | சமூகப்பாதுகாப்புப் நலனும் | 1,65,08 | 2,67,61 | 4,53,97 | 4,93,91 |
| 2250 | ஏனைய சமூகப் பணிகள் | 12,52 | 16,34 | 17,00 | 15,39 |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | ... | **1** | **1** | **1** |
| **4220** | **செய்தி, விளம்பரம் குறித்த மூலதனச் செலவு** | ... | ... | ... | **1** |
| | **மொத்தம்** | **138,48,20** | **144,81,00** | **162,49,51** | **151,02,77** |



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை
மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்
திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் 2023–2024ஆம் ஆண்டிற்கான
செய்தி மற்றும் விளம்பரத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு
முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.
(சென்னை, தலைமைச் செயலகம் – 10.04.2023)



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்
திரு. **மு.பெ.சாமிநாதன்** அவர்கள்
தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும்
தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்டார்.
(சென்னை, தரமணி – 9.3.2023)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சமத்துவ நாளையொட்டி அண்ணல் அம்பேத்கர் அவர்களின்
திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.
(சென்னை, அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம் – 14.04.2023)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின்
திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.
(சென்னை, கிண்டி – 17.04.2023)



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள், 360 டிகிரியில் படமெடுத்துள்ள நினைவகங்கள் மற்றும் தலைவர்களின் சிலைகளை, விரைவு துலங்கல் குறியீடு மூலம் பொதுமக்கள் பார்வைக்கு தொடங்கி வைத்தார்.
(சென்னை, காமராஜர் சாலை – 02.05.2023)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தமிழ்நாடு அரசின் ஈராண்டு சாதனைகளை விளக்கும் வகையில் செய்தி மக்கள்
தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியைத்
திறந்து வைத்து பார்வையிட்டார்.
(சென்னை, கலைவாணர் அரங்கம் – 06.05.2023)



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் "தமிழரசு இதழின்" 1 லட்சத்து 1ஆவது
சந்தாதாரருக்கு தமிழரசு இதழை வழங்கினார்.
(சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்டரங்கம் – 11.05.2023)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி
சிறப்பு விருந்தினர் மேற்கு வங்க மாநில முன்னாள் ஆளுநர்
திரு. கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் முன்னிலையில்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு இலச்சினை வெளியிட்டார்.
(சென்னை, கலைவாணர் அரங்கம் – 02.06.2023)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன்
அவர்களின் திருவுருவச்சிலையைத் திறந்து வைத்தார்.
(சென்னை, காந்தி மண்டப வளாகம் – 05.09.2023)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின்
திருவுருவச் சிலையை திறந்து வைத்து, திருவுருவப்படத்திற்கு
மலர்தூவி மரியாதை செலுத்தினார்.
(சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகம் – 15.10.2023)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திராவிடப் பேரொளி பண்டிதர் அயோத்திதாசர் அவர்களின்
திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்.
(சென்னை, காந்தி மண்டப வளாகம் – 01.12.2023)





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சிவகங்கை மாவட்டம், மகிபாலன்பட்டியில் பெரும்புலவர் கணியன் பூங்குன்றனார் அவர்களின் நினைவுத்தூணை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.
(சென்னை, தலைமைச் செயலகம் – 22.01.2024)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரில்லா தலைவர்களாகத் திகழும்
பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும், புதிதாக
அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தையும்
திறந்து வைத்தார். (சென்னை, மெரினா கடற்கரை – 26.2.2024)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடம் மற்றும் புதிதாக
அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் திறப்பு
நிகழ்ச்சியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலையை திறந்து வைத்தார்.
(சென்னை, மெரினா கடற்கரை – 26.2.2024)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களுக்கு திருவுருவச்சிலையுடன் கூடிய
குவிமாட அரங்கம், தியாகி அண்ணல் தங்கோ அவர்களுக்கு திருவுருவச்சிலை,
இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு திருவுருச்சிலையுடன் கூடிய
நினைவு மண்டபம், பேரரசு பெரும்பிடுகு முத்தரையர், சர்.ஏ.டி.பன்னீர்செல்வம்,
திரு.எம்.கே.தியாகராஜ பாகவதர் ஆகியோர்களுக்கு மணிமண்டபம்,
வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தில் குதிரையில் அமர்ந்து போர் புரிவது போன்ற
புதிய சிலை ஆகியவற்றை திறந்து வைத்தார்.
(சென்னை, தலைமைச் செயலகம் – 27.2.2024)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
2022ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதினை
மூத்த பத்திரிகையாளர் திரு.வி.என்.சாமி அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்.
(சென்னை, தலைமைச் செயலகம் – 8.3.2024)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
கனவு இல்லம் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சு.வெங்கடேசன்
அவர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பிற்கான ஒதுக்கீட்டு
அரசாணையை வழங்கினார்.
(சென்னை, தலைமைச் செயலகம் – 8.3.2024)



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்
திரு. **மு.பெ.சாமிநாதன்** அவர்கள் சென்னை, வள்ளுவர் கோட்டத்தை
ரூ.80 கோடி மதிப்பீட்டில் நவீன முறையில் புதுப்பித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு
கொண்டு வரும் பணிகளை 20.6.2024 அன்று ஆய்வு மேற்கொண்டார்.

©
தமிழ்நாடு அரசு
2024

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.